# நிறுத்து

## வன்முறைகளுக்கு எதிராக பெண்களை வலிமையாக்கும் கையேடு




பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு

அய்டியாஸ் மையம், மதுரை.

# நிறுத்து

**வன்முறைகளுக்கு எதிராக பெண்களை வலிமையாக்கும் கையேடு**


உருவாக்கம்

வழக்கறிஞர் A. **சந்தனம்**.சே.ச. *B.A.B.L.*

வழக்கறிஞர் **சாயீரா பானு**. *B.A.B.L.*

வழக்கறிஞர் **மீனாட்சி மகாலிங்கம்**.*L.L.M.*



**மார்ச் 2024**

**பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு**

**அய்டியாஸ் மையம், மதுரை.**

# அணிந்துரை

ஐ.நா. சபை 2024 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை, ‘‘பெண்களையும் உள்ளடக்கிய முன்னேற்றத்திற்கான உத்வேகம் அளிக்கிற நாளாக’’ பிரகடனப்படுத்தியுள்ளது. பெண்களை சமமாக நடத்துகிற சமூகமே நாகரீக வளர்ச்சி பெற்ற சமூகமாகும். பாலின சமத்துவம் இந்தியாவில் சட்டப் புத்தகங்களில் உறுதி செய்யப்பட்டிருந்தாலும், நடைமுறையில் அது சாத்தியமற்றுப் போயுள்ளது. உலகிலேயே இந்தியா பெண்களுக்கு பாதுகாப்பற்ற நாடுகளில் முதலிடத்தில் இருப்பது நம்மையெல்லாம் வெட்கித் தலைகுனிய வைக்கிறது. இந்தியச் சமூகத்தின் பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தையே இது காட்டுகிறது. நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இங்கு பன்னெடுங்காலமாக புரையோடிப்போயிருக்கும் சாதிய கட்டமைப்பே அதற்கு காரணமாக இருக்கிறது. சனாதன கோட்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இந்தியாவில் பெண்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ முடியவில்லை. அரசு ஆவணங்களின்படி, 2022-ல் இந்தியாவில் 4 இலட்சத்து 45 ஆயிரத்து 526 வன்முறைத் தாக்குதல்கள் பெண்களுக்கு எதிராக பதிவாகியுள்ளன. இந்தியாவில், 1 இலட்சம் பெண்களுக்கு 66.4 பெண்கள் வன்முறையால் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு 51 நிகழ்வுகளில் முதல் தகவலறிக்கைகள் இந்தியாவில் பதியப்படுகின்றன. எதார்த்தம் என்னவெனில், பெண்களுக்கெதிரான 80 சதவீத வன்முறை நிகழ்வுகள் காவல்நிலையங்களில் முதல் தகவல் அறிக்கையாகவே பதியப்படுவதில்லை. அவற்றையெல்லாம் கணக்கிட்டால், எண்ணிக்கை பல மடங்கு அதிகமாகும். இந்திய ஒன்றிய அரசின் கணக்குப்படி, 33 சதவீதத்திற்கும் அதிகமான இந்திய குடும்பங்களில் பெண்கள் அந்த குடும்பத்திற்குள்ளே இருக்கும் யாரோ ஒரு ஆண் நபரால், வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறாள். நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் பெண்களின் நிலை குறித்து எப்படிப்பட்ட சித்தாந்தத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இதற்கு ஒரு காரணியாக இருக்கிறது. இப்படிப்பட்டச் சூழலில்தான், அய்டியாஸ் மையம் பெண்களுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு வழிகாட்டுக் குழுவை ஏற்படுத்தி, வன்முறைகளுக்குள்ளாகும் பெண்கள் சார்பாக அழுத்தமான தலையீடுகளை செய்து வருகிறது. அதற்கு உரம் சேர்க்கும் வகையில், ‘‘நிறுத்து’’ என்ற தலைப்பில் பெண்களை வலிமையாக்கும் வழிகாட்டுக் கையேட்டினை வெளியிடுவதில் பெருமைப்படுகிறது. இந்தக் கையேடு வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மட்டுமல்லாமல், அவர்களுக்குத் துணைநிற்க முன்வரும் எவரும் எளிதில் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் நான் நெஞ்சார பாராட்டுகிறேன். அய்டியாஸ் மையத்தின் மூலம் பலனடைந்த பெண்கள் மற்றும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் யாவரும் வலிமைபெற்று நம்பிக்கையுடன் வாழவும், பாதிக்கப்படும் பெண்களுக்கு துணிந்து துணைநிற்க முன்வரவும் இந்தக் கையேடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தோழமையுடன்,

முனைவர். **அ. சகாய பிலோமின் ராஜ்.**சே.ச.
இயக்குநர்,
அய்டியாஸ், மதுரை

# அறிமுகம்

அய்டியாஸ் மையத்தில் செயல்படும் பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு கடந்த சில ஆண்டுகளாக தோழமை அமைப்புகளுடன் இணைந்து தமிழகம் முழுவதும் விளிம்பு நிலையில் உள்ள பெண்களுக்கு உதவும் வகையில் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்கவும், பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தவும் சமூக அக்கறையோடு செயல்பட்டு வருகிறது.

இந்திய சமூகத்தில் சரிபாதி மக்கள் பெண்களே. இந்திய சமூகத்தின் மேம்பாட்டிற்கு பெண்களின் உழைப்பு மகத்தானது. 1950-ல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசமைப்புச்சட்டம் இந்திய பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான சமத்துவத்தை முதன்முதலில் நிலைநாட்டியது. பாலின அடிப்படையில் எந்த வேறுபாடும் காட்டக்கூடாது, சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற புதிய சகாப்தம் உருவானது. சட்டம் சமத்தவத்தை நிலைநாட்டினாலும், சமூக யதார்த்தம் ஏற்றத்தாழ்வின் தளமாகவே இருந்துவருகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்த பெண் அடிமைத்தனம் எளிதில் ஒழிக்கமுடிகின்ற ஒன்று அல்ல. இன்றும் சமூகத்தில், பொருளாதாரத்தில், அரசியலில் பெண்கள் வஞ்சிக்கபட்டவர்களாகவே உள்ளனர். கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கப்பட்டாலும் பெண்களின் ஒட்டுமொத்த வளாச்சி சமூகத்தின் பிற்போக்கு எண்ணங்களால் தடைபட்டுக்கொண்டே இருக்கிறது. அரசியல் பங்கேற்பில் உள்ளாட்சித்துறையில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டாலும், சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் இது இன்னும் கனவாகவே உள்ளது.

குழந்தைத் திருமணம் தடை, வரதட்சனை தடை, குடும்ப வன்முறைகளுக்குத் தடை, வேலை செய்யும் இடங்களிலில் பாலியல் வன்முறைக்குத் தடை என்று சட்டங்கள் வந்தாலும், பாலியல் பலாத்காரத்திற்கு தண்டணை கடுமையானாலும் ஒவ்வொரு ஆண்டும் புள்ளி விபரங்கள் கவலைதருவதாகவே உள்ளது.

இந்த இருபத்து ஓராம் நூற்றாண்டில் விரும்பிய ஆணை திருமணம் செய்யக்கூட உறவுகள், சாதிகள் தடையாக உள்ளன. ஆணவக் கொலைகள் தடுக்கப்பட தனிச்சட்டம் வேண்டும் என்ற குறல் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

எனவே பெண்கள் மீதான வன்முறைகளையும், அநீதிகளையும் ஒழிப்பதற்கு அவர்களை பலப்படுத்தி ஒருங்கிணைக்க வேண்டியது நம் அனைவருடைய கடமையாகும். இதை உணர்ந்து செயல்படுகின்ற அமைப்புதான் அய்டியாசின் பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு.

பெண்கள் சமூக அவமதிப்பு மற்றும் கலாச்சார தடைகள் பற்றிய பயம் காரணமாக தனக்கு நடக்கும் வன்முறைக்கு எதிராக வெளிப்படையாக சொல்லவும் நீதிமன்றத்தை நாடவும், சாட்சியமளிக்கவும் தயங்குகிறார்கள். பெண்களின் இந்த நிலை சமூகத்தில் மாறினால் தான் பெண்கள் அவர்களுக்கான முழுமையான

சமத்துவத்தை பெற முடியும் என்று நம்பி செயல்படுகிறது அய்டியாசின் பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு.

பெண் சமூகத்தை சமத்துவம் இல்லாமல் பாகுப்பாடுடன் நடத்துவது மனித உரிமை மீறலாகும். இந்த கொடிய அநீதி வீட்டிலிருந்துதான் துவங்குகிறது. இது முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு, பெண்களின் உரிமைகள் மற்றும் பாலின சமத்துவம் பற்றிய ஆழமான அறிவை பெண்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகிறது. அவர்களுக்கு சட்ட அறிவு மற்றும் திறன்களை வளர்க்கவும், குடும்ப வன்முறை வழக்குகள் தொடர்பான நீதித்துறை தலையீடுகளை தைரியமாக சந்திக்கவும் மற்றும் பெண்கள் தங்களுடைய வட்டாரத்தில் பாலினம் தொடர்பான குற்றங்களுக்குத் தாங்களே தீர்வுகாணத் தொடங்கும் போதெல்லாம் உடன் நின்று பயணிக்க அவர்களுடன் தொடர்ந்து ஆதரவளித்து சமூக சிந்தனையுடன் பெண்கள் செயல்பட வேண்டும் என்ற கோணத்தில் இக்குழு செயல்பட்டுவருகிறது. இதற்காக பயிற்சியாளர்களை உருவாக்கும் பயிற்சியினையும், சுவர் ஒட்டிகள் வழியாக சமூகத்தில் வழிப்புணர்வையும் ஏற்படுத்திவருகிறது. அவசர உதவிக்கும் வழிகாட்டதலுக்கும் 24 மணிநேரமும் செயல்படும் அலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பயிற்சியாளருக்கான பயிற்சி எப்படி நடத்த வேண்டும், அதில் இடம்பெறவேண்டிய முக்கிய பயிற்சி அம்சங்கள் என்ன என்பதுபற்றி இந்த கையேடு விளக்கி பயிற்சியாளருக்கும் பயிற்சி பெறுபவருக்கும் துணைநிற்கின்ற வகையில் இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

## பெண்களுக்கு எதிரான வன்முறையை
## தவிர்ப்போம்! தடுப்போம்!! தட்டிக்கேட்போம்!!!

## நன்றிகள்...

நிறுத்து என்ற வன்முறைக்கு எதிராக பெண்களை வலிமைப்

படுத்தும் கையேடு உருவாக அயராது உழைத்த

வழக்கறிஞர் **ஆ.சந்தனம்.சே.ச.**

வழக்கறிஞர் **சாயீரா பானு**

வழக்கறிஞர் **மீனாட்சி மகாலிங்கம்**

ஆகியோருக்கு நன்றி.

இக்கையேடு மெருகூட்டப்பட துணை நின்ற

வழக்கறிஞர் **அ. சவரிராஜ்**

வழக்கறிஞர் **ரோசலின் மேரி**

அவர்களுக்கு நன்றி.

இக்கையேடு உருவாவதற்கு ஆலோசனைகளை வழங்கிய

வழக்கறிஞர் **ஜோசப் சேவியர்**

வழக்கறிஞர் **சகாய பிலோமின் ராஜ்**

அவர்களுக்கு நன்றி.

கணினியில் தட்டச்சு செய்து உதவிய **கனிமொழி மைக்கில்** அவர்களுக்கு நன்றி.

# தோழமை அமைப்புகள்

| பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்புக்குழுவுடன் இணைந்து வன்முறையை தடுக்க பணிசெய்யும் தோழமை அமைப்புகள் மற்றும் அவற்றின் முகவரிகள் | |
|---|---|
| **தமிழ் மாநில பெண்கள் இயக்கம்**<br>எண்–15 எம்.எஸ்.வி.ஆர் கட்டிடம்<br>மதுரை மெயின் ரோடு,<br>தேனி – 625 531 | **தலித்பெண்கள் கூட்டமைப்பு**<br>அய்டியாஸ் மையம்<br>எண் 26,A வாழைத்தோப்பு<br>சிந்தாமணி ரோடு, மதுரை–625 001 |
| **தீபம் தொண்டு நிறுவனம்**<br>திண்டுக்கல்–தேனி பைபாஸ் ரோடு<br>வத்தலக்குண்டு<br>நிலக்கோட்டை தாலுகா<br>திண்டுக்கல் மாவட்டம் – 624 202 | **அமுது சமூகப்பணி மையம்**<br>எண் 444– எ.ஆர்.எஸ் கட்டிடம்,<br>எ.எஸ்.எம் பேட்டை,<br>ஒட்டன்சத்திரம் தாலுகா<br>திண்டுக்கல் மாவட்டம் – 624 619 |
| **பவர் தொண்டு நிறுவனம்**<br>ஹோலிகிராஸ் கான்வென்ட்<br>விராலிமலை – 621 316<br>புதுக்கோட்டை மாவட்டம் – 621 316 | **பாதர் பேட்ரிக் ஐசக் ஹோம்**<br>சிரிங்கேரி நகர்<br>மதுரை பைபாஸ் சாலை<br>மதுரை – 625 016 |
| **சக்தி விடியல்**<br>எண் 6,AA ரோடு,<br>இரத்தினபுரம்,<br>மதுரை –625 011 | **சாக் சீட் (SOC – SEAD)**<br>எண்395,ஹோலிகிராஸ் கல்லூரி<br>தெப்பக்குளம்<br>திருச்சி – 620 101 |
| **ஆரோக்கிய அகம்**<br>பாலகொம்பை சாலை<br>ஆண்டிப்பட்டி<br>தேனி மாவட்டம் – 625 512 | **பெண்கள் பணிக்குழு**<br>நோபிலி அருட்பணி நிலையம்<br>கோ.புதூர்<br>மதுரை – 625 007 |
| **திருச்சிலுவை சமூகப்பணி மையம்**<br>பரவை காலனி<br>மதுரை – 625 402 | **சினேகா சமூகபணி மையம்**<br>சென்னிமலை சாலை<br>காங்கேயம்<br>திருப்பூர் மாவட்டம் – 638 701 |

# உள்ளே...


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | 01 |
| | அறிமுகவுரை | 02 |
| | நன்றிகள் | 04 |
| | தோழமை அமைப்புகள் | 05 |
| | திறன் மேம்பாட்டுப் பயிற்சி | 07 |
| | **பயிற்சியின் மாதிரி – முதல் நாள்** | 08 |
| | அமர்வு–1 பாலின அடிப்படைகள் | 08 |
| | அமர்வு–2 பெண்களுக்கு எதிரான வன்முறைகள் | 10 |
| | அமர்வு–3 குழு விவாதம் – அனுபவ பகிர்வு | 12 |
| | அமர்வு–4 சிந்தனையை தூண்ட, திறனை வளர்க்க | 14 |
| | **பயிற்சியின் மாதிரி – இரண்டாம் நாள்** | 15 |
| | அமர்வு–1 பெண்கள்மீதான வன்முறைகள் – ஒரு பார்வை<br>இந்தியாவில் பெண்கள் உரிமைக்கான சட்டங்கள் | 16 |
| | அமர்வு–2 பெண்களும் அடிப்படை உரிமைகளும் | 18 |
| | அமர்வு–3 குடும்ப நலச் சட்டங்கள் இந்து, இசுலாமியர், கிறித்தவர்<br>தனிச் சட்டங்கள் | 20 |
| | அமர்வு–4 பெண்கள் & இந்திய தண்டனைச் சட்டம் 1860 | 30 |
| | அமர்வு–5 வரதட்சணைத் தடை (திருத்த) சட்டம் 1986<br>குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005 | 39 |
| | அமர்வு–6 பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்<br>(தடுப்பு, தடை மற்றும் தீர்வு காணுதல்) சட்டம் 2013 | 46 |
| | அமர்வு–7 பாலியல் வன்கொடுமைகளிலிருந்து சிறாரைப் பாதுகாக்கும்<br>சட்டம் 2012 | 53 |
| | **பிற்சேர்க்கை** | 62 |
| | ஒரு புகாரை எழுதும்போது கவனத்தில் இருக்கவேண்டியவைகள்... | 62 |
| | புகார் மாதிரி படிவம் | 63 |
| | பெண்களுக்கான சில முக்கியமான நம்பிக்கை தரும் தீர்ப்புகள் | 64 |
| | அவசர உதவிக்கு அழைக்கவேண்டிய எண்கள் | 69 |

# திறன் மேம்பாட்டுப் பயிற்சி

## திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் நோக்கம்

பெண்களை பாலின வேறுபாடு இன்றி சமூகத்தில் அனைவரும் சரிசமமாக நடத்தவேண்டும். மேலும் பெண்களுக்கான உரிமைகளையும், சட்டங்களையும் எளிய முறையில் விளிம்புநிலையில் உள்ள பெண்களின் மத்தியில் கொண்டு சேர்க்கவேண்டும்.

## திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான காரணங்கள்

- பெண்களுக்கு பாலின ரீதியான புரிதலை ஏற்படுத்துதல்,
- பெண்களுக்கான சட்டங்கள், விதிகள், ஆணைகள் மற்றும் உரிமைகள் பற்றிய தெளிவுகளை ஏற்படுத்துதல்,
- திருமண உறவிலுள்ள உரிமைகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல்,
- இந்திய அரசியலமைப்பிலுள்ள உரிமைகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல்,
- பெண்கள் தைரியமாக நீதிமன்றத்தை அணுக வழிகாட்டுதல்.
- இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த புள்ளி விவரங்கள் மற்றும் பெண்களுக்கு சாதகமான நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் பெண் விடுதலையின் முக்கியத்துவதை அறிய வைத்தல்.

## இப்பயிற்சியில் கலந்துக்கொள்பவர்கள்

→ பெண்களின் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வன்முறை இல்லாத சமூகத்தை உருவாக்க போராடி வரும் பெண்கள் அமைப்புகள்.
→ நாளைய தலைமுறைகளான கல்லூரி மாணவர்கள் (சமூகப் பணி மாணவர்கள்),
→ பெண்கள் முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வரும் சமூகசெயற்பாட்டாளர்கள்,
→ பெண்களின் முன்னேற்றத்திற்காக பணி செய்யும் பெண் ஆண் ஆளுமைகள். இரண்டு நாட்கள் நடைபெறும்.

## இப்பயிற்சியின் கால அளவு

குறைந்தது 2 முதல் 3 நாட்கள்.


## இப்பயிற்சியில் பின்பற்றப்படும் யுக்திகள்

கணிணி வழி விளக்க காட்சிகள், குழு விளையாட்டுகள், குழுப்பகிர்வு, அனுபவ பகிர்வு, செய்தி தாள்களில் வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கொண்டு பட்டிமன்றம், பெண்கள் முன்னேற்றத்திற்கான சமூக சிந்தனை உடைய வீடியோ, ஆடியோ, துண்டு பிரசுரங்கள் மற்றும் விளையாட்டுகள், மாதிரி வழக்குகள் பற்றிய ஆய்வுகள், சமூகத்தில் பெண்களின் நிலை பற்றிய விழிப்புணர்வு நாடகம் மற்றும் சொற்பொழிவு மூலம் பயிற்சியினை தொய்வு இன்றி கொண்டு செல்லுதல்.

## பயிற்சியின் மாதிரி – முதல் நாள்

**அமர்வு– 1**

இந்த பயிற்சியின் முதல் நாள் பாலின அடிப்படைகளை பயிற்சியாளர்களுக்கு எளிய முறையில் புரிய வைக்க முயற்சிக்கப்படுகிறது.



- பாலினம், பாலின வன்முறை அதன் வகைகள், பாலின வன்முறைக்கான காரணங்கள் அதனால் ஏற்படும் விளைவுகள்.
- பாலின வன்முறையால் பாதிக்கபட்டவரை அணுகும் முறைகள் மற்றும் அவர்களுக்கான தீர்வுகள்.
- சமூகநல பராமரிப்பு, மன நல ஆலோசனை, குழு ஆற்றுபடுத்துதல்.

வகுப்பில்: 1

- ✓ பயிற்சியாளர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு, பெண்ணைப் பற்றி இந்த சமூகம் எப்படிப்பட்ட கருத்துகளை உள்வாங்கி வைத்துள்ளது என்பதை அறிவதற்காக பங்கேற்பாளர்களுக்கு பெண் என்று தோன்றும் போது, முதலில் நினைவிற்கு வரகூடியவை எது? என்பது குறித்து வரையச் செய்தல்.
- ✓ அதே போன்று ஆண் என்று சொல்லும்போது நினைவுக்கு வருவது என்ன என்பதை குறித்துக்கொள்ளச் செய்வது.
- ✓ அதன் அடிப்படையில் பெண் என்று கூறும் போது பூ என்றும், அன்பானவள், அழுகை, அழகானவள் என்றும், ஆண் என்று கூறியவுடன் அதிகாரம், வீரம், தைரியம் என்றும் கூறுவதை விளக்கிச் சொல்ல வேண்டும்.

வகுப்பில்: 2

பெண்கள் மீது பாலியல் வன்முறை நிகழ்வதற்கு பெண்களின் அரைகுறை ஆடையே காரணம். இது சரியா தவறா? ஆண் பெண்ணை விட உயர்ந்தவன். இது சரியா தவறா? என்று கேள்வி கேட்டு விவாதங்களை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு புரியும் வண்ணம் எளிதாக,

- ✓ பால், பாலினம் என்றால் என்ன? என்ற புரிதலை பயிற்சியாளர்களிடையே ஏற்படுத்துதல்.
- ✓ பாலினம் குறித்து அடிப்படை விளக்கத்தையும் அதன் புரிதலையும் பற்றி தெளிவுப்படுத்துதல்.
- ✓ சமூகத்தில் பெண் பாலினம் பற்றியை தவறான புரிதலும், பெண்கள் ஆண்களை விட தாழ்ந்தவர்கள் என்ற தவறான கண்ணோட்டமும் பரவியிருப்பதே, பெண்கள் மீதான வன்முறைக்கு முக்கிய காரணமாக உள்ளது என்ற சிந்தனையை ஏற்படுத்துதல்.

## பாலினம் என்பது?

பாலினம் என்பது ஆண்பால், பெண்பால், இந்த இரண்டு பாலும் அல்லாத அல்லது பொதுவானது போன்ற உடல் வடிவத்தில் இயற்கையான வேறுபாட்டின் படி ஒரு நபரின் பாலின அடையாளத்தை விவரிக்கும் பண்பு என வரையறுக்கப்படுகிறது. பாலினம் என்பது பால் அடிப்படையிலான அமைப்பு மற்றும் அடையாளத்தின் படி ஒரு நபரின் பண்புகளை விவரிக்கிறது.

## பாலினப் பண்புகள்?

ஆண், பெண் அல்லது மூன்றாம் பாலினம் என அவர்களின் நிலையை வெளிப்படுத்தும் செயல்கள் அல்லது பதில்கள் என வரையறுக்கப்படுகிறது. பாலினப் பண்புகளை சுற்றியுள்ள கூறுகளில் ஆடை, பேச்சு முறைகள், இயக்கம், தொழில்கள் மற்றும் உயிரியல் பாலினத்துடன் மட்டுப்படுத்தப்படாத பிற காரணிகள் அடங்கும். பாலின பண்புகள் தனிநபர் அடையாளங்களாகவே கருதப்படுகின்றன. சமுதாயத்தில் வாழும் அனைவரும் சமூக அங்கீகாரம், சமூக ஒருங்கிணைப்புகளை அடிப்படையாகக் கொண்டும் பாலினப்பண்புகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

## பாலின வேறுபாடு என்றால்?

பாலின வேறுபாடு என்பது ஒருவருக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள், முன்னுரிமைகள், பரிசுகள் ஆகியவற்றை காரணம் காட்டி மறுப்பதைக் குறிக்கிறது. அதாவது பெண்களுக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்புகள், பதவி உயர்வு

போன்றவைகளில் பாலின வேறுபாடு பின்பற்றப்படுகின்றன. சில நேரங்களில் ஆண்கள் எனும் காரணத்திற்காக வாய்ப்புகள், சலுகைகள், பதவி உயர்வு கிடைக்கின்றன.

பல நேரங்களில் சமூகத்தில் பெண்கள் கீழ்ப்படிதல், பராமரித்தல், கவனிப்பு, மென்மை போன்ற குணங்கள் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும் என்றும், ஆண்கள் பகுத்தறிவு, போட்டி மனப்பான்மை, தன்னம்பிக்கை, பலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். சமூகத்தில் ஆண் செய்ய வேண்டியவற்றை பெண் செய்யக்கூடாது, பெண் செய்ய வேண்டியவற்றை ஆண் செய்யக்கூடாது என்பது பண்டைய காலத்திலிருந்து பின்பற்றக்கூடியச் சட்டமாகும்.

## அமர்வு 2

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல். (அதாவது வன்முறையின் வகைகள் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை அணுகும் முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படும்)

**வன்முறைகள் நான்கு வகை**

- உடல் சார்ந்த வன்முறை
- உள்ளம் சார்ந்த வன்முறை
- பாலியல் வன்முறை
- பொருளாதார வன்முறை

**உடல் சார்ந்த வன்முறை**

உடல்ரீதியாக துன்புறுத்தல் - அடித்தல் உதைத்தல் போன்ற அனைத்து வகையான காயங்கள்.



**உள்ளம் சார்ந்த**

- பெண்ணை தவறாக பேசுதல்.
- பள்ளி, கல்லூரி மற்றும் எந்த கல்வி நிறுவனத்திற்கும் செல்லகூடாது என்று தடைவிதித்தல்.
- வேலைக்கு செல்லகூடாது என்று தடுத்தல்.
- பெண்ணிற்கு விருப்பமானவரை திருமணம் செய்வதற்கு தடை செய்தல்.
- ஆண் குழந்தை பெற்று தரவில்லை என தகாத வார்தையில் பேசுதல்.

**பாலியல் வன்முறை**

கட்டாய உடலுறவுக்கு பலவந்தப்படுத்துதல் - ஆபாசபடம் அல்லது ஆபாச வீடியோ பார்க்க கட்டாயப்படுத்துதல் - பெண்ணை வலுக்கட்டாயமாக தவறான பாலியல் உறவுக்கு பயன்படுத்துதல் - பெண்ணின் கன்னியத்தை குலைத்தல் இன்னும் பிற.

**பொருளாதார வன்முறை**

பெண்களையும்,குழந்தைகளையும் பராமரிக்காமல் இருத்தல் - உணவு, உடை மருத்துவம் என அடிப்படை வசதிகளை வழங்காமல் இருத்தல் - பெண்ணை வீட்டை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றுதல் - வீட்டின் எந்தப் பகுதியையும் அணுகுவதிலிருந்தோ அல்லது பயன்படுத்துவதிலிருந்தோ தடுத்தல் - பெண்ணின் சொத்தினை விருப்பம் இல்லாமல் விற்றல், அடகு வைத்தல் - பெண்ணின் சம்பளத்தை வலுக்கட்டாயமாக வாங்குதல்.



## வன்முறையால் ஏற்படும் பாதிப்புகள்

### தனிநபர்

1. உளவியல் பாதிப்பு.
2. ஊக்கம், சுயமதிப்பீடு, நம்பிக்கை குறைவு.
3. உணர்வு ரீதியாக, நண்பர்கள், சக பணியாளர்கள், குடும்பத்திலிருந்து தனிமைப்படுதல்.
4. தூக்கமின்மை உட்பட மனஅழுத்தம் தொடர்பாக ஏற்படும் உளவியல் பாதிப்பு.
5. உடல்நல குறைவு, வயிறு பிரச்சனை.
6. தொழில்பூர்வமாக இழப்புகள், வாய்ப்புகள் தவறவிடுதல், வேலையை விட்டுவிடுதல்.

### குடும்பம்

1. அணியாக செயல்பட முடியாமை.
2. தன்முனைப்பு குறைவு
3. வேலைக்கு செல்லாமல் இருத்தல்
4. குழந்தைகளை கவனிக்காமல் இருத்தல்

### சமூகம்

1. பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் பழையபடி சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வது கடினம்.
2. உற்பத்தி வளர்ச்சி பாதிப்பு
3. உயர் அந்தஸ்து, அதிக சம்பளம் பெறக் கூடிய பெண்கள் வேலைகளை பெறுவதில் ஏற்படும் தாமதம்.

## வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் வெளி உலகில் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை சொல்லாமல் இருப்பதற்கான காரணங்கள்

- தனக்கு நடந்ததைப் பற்றி வெளியில் சொன்னால் அவமானம் மற்றும் வெட்கம் என நினைத்தல்.
- பல சமயங்களில் நடந்த விஷயத்திற்கு ஆதாரங்கள் இல்லாததால் தாங்கள் சொல்வதை மற்றவர்கள் நம்ப மாட்டார்களோ என்று நினைப்பது.
- ஆண்களின் மோசமான நடத்தைகளுக்கு, பெண்ணின் நடத்தைகள் தான் காரணம் என்று சொல்லி விடுவார்களோ என்றும், மேலும் குடும்பத்தை பற்றி அவதுாறாக பேசிவிடுவார்களோ என்றும் அச்சப்பட்டு தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிப்படுத்துவது இல்லை.

## அமர்வு 3

## குழு விவாதம் & அனுபவப் பகிர்வு

பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரித்து தினசெய்திகளில் வெளிவந்த பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த செய்திகளையோ அல்லது வழக்குகளையோ, அதில் எம்மாதிரியான வன்முறை ஏற்பட்டுள்ளது என்றும், அதன் காரணங்களையும் தீர்வுகளையும் பயிற்சியாளர்கள் மூலமாகவே குழுவாக உரையாட வைத்தல்.

**உதாரணமாக**



கலா என்ற பெண் 18 வயது நிரம்பியவள். வறுமையினால் பெற்றோர்கள் இடையில் அவரின் கல்வியை நிறுத்தி, 40 வயதுடையவரை திருமணம் செய்து வைத்து விடுகிறார்கள். அவள் 2 பெண்குழந்தைக்கு தாய் ஆகிறாள். ஆண் குழந்தை பெற்று தரவில்லை என்றும், அதிக வரதட்சணை கொண்டு வரவில்லையென்றும் கூறி மாமியார் அவதுாறாக பேசி திட்டிவருகிறார். மேலும் கணவர் அப்பெண்ணை சந்தேகப்பட்டு அடித்து துன்புறுத்தி வருகிறார். கலாவிற்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

**மேற்கண்ட சம்பவத்தில் என்ன வன்முறை நடந்துள்ளது? அதற்கான தீர்வுகள்?**

- கலா என்ற பெண்ணை 18 வயது பூர்த்தி ஆகாமல் திருமணம் செய்து கொடுத்தது சட்டபடி குற்றமாகும்.
- உடல்ரீதியான வன்முறை (அடித்தல், உதைத்தல்)
- உள்ளம் ரீதியான வன்முறை (ஆண் குழந்தை பெற்று தரவில்லை, வரதட்சணை கேட்டு தினமும் அவதுாறாக பேசியது)
- வயது வித்தியாசம் இல்லாமல் தன்னை விட அதிக வயது முதிர்ந்தவருக்கு திருமணம் செய்துகொடுத்தது.

## தீர்வுகள்

- முதலில் கலாவிற்கு மனரீதியிலான ஆலோசனை வழங்குதல்.
- பாதுகாப்பு அதிகாரி அல்லது தொண்டு நிறுவனங்கள், காவல்துறை உதவியை நாடுதல்.
- குடும்ப வன்முறை வழக்கு தாக்கல் செய்து தனக்கும் தன் குழந்தைகளுக்கும் பராமரிப்பு, மற்றும் பாதுகாப்பு உத்தரவினை பெறுதல். வரதட்சணை வழக்கு சம்பந்தமாக போலீசில் புகார் அளித்தல்.

## பெண்கள் மனநலன் குறித்த உளவியல் ஆலோசனை

- பெரும்பாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் மீதே இந்த சமூகம் தொடர்ந்து பழி ஏற்படுத்தி வருகின்றது. பெண்கள் தங்கள் வன்முறைகளை வெளியில் சொல்வது மூலமாக தங்களுக்கு ஏற்பட்டுவரும் மனபாதிப்புகள், உடல் பாதிப்புகளிலிருந்து மீண்டுவர அவர்களுக்கு மன தைரியத்தை ஏற்படுத்த உதவி புரிதல்.

## வன்முறையால் பாதிக்கப்பட்டவரை அணுகும் முறை மற்றும் தீர்வு

- வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணை மனநல ஆலோசனைக்கு தயார் செய்தல்.

**உதாரணமாக**

என் வீட்டு அருகில் பிரியா என்ற பெண் உள்ளார். அவர் வீட்டில் எப்போதும் சண்டைகள் நடந்தவாரே இருக்கும். அந்த பெண்ணை அக்கம் பக்கத்தில் யாரிடமும் கணவர் பேச அனுமதிப்பதில்லை. அப்பெண்ணிற்கு வேலையில் எந்த நாட்டம் இல்லாமல் குழந்தைகளை சரியாக கவனித்துக்கொள்வதும் இல்லை. எப்பொழுதும் மனவிரக்தியுடன் காணப்பட்டார். என் குழந்தை படிக்கும் பள்ளியில் தான் பிரியா குழந்தையான கவின் படித்து வருகிறார். குழந்தை கல்வியில் கவனம் செலுத்துவதில்லை என்று கூறி பிரியாவின் குழந்தையை அவரது ஆசிரியர் கண்டித்து வந்துள்ளார். என் குழந்தை என்னிடம் கவின் சரியாக படிப்பது இல்லை என்றும் அடிக்கடி பள்ளிக்கு விடுப்பு எடுக்கிறான் என்று கூறினார். இதனை தொடர்ந்து நான் பிரியாவிடம் குழந்தையைப் பற்றி பேசினேன்.

முதலில் பிரியா என்னிடம் அவர் குடும்பத்தில் என்ன நடக்கிறது என்பதை கூற மறுத்தாலும், அவருக்கு என் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் நான் பேசினேன். குழந்தை படிப்பில் கவனம் செலுத்தாமல் இருப்பதையும் இதனால் குழந்தையின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படும் என்பதையும் கூறிய பின்பு, பிரியா என்னிடம் அவர் குடும்பத்தில் நடக்கின்ற விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

கணவர் தினமும் மது அருந்திவிட்டு அடிப்பதும், தகாத வார்த்தைகளால் பேசுவதுமாக இருந்து வருகிறார். இதனால் என் கணவரை பார்த்து நானும் என் மகனும் பயந்து வாழக்கூடிய சூழ்நிலையில் உள்ளோம் என்றும் வீட்டை விட்டு வெளியில் வந்தால் எங்கள் அன்றாட தேவைகள் மற்றும் என் குழந்தையின் படிப்பு செலவு போன்றக் காரணத்தினால் வீட்டை விட்டு எங்கு சென்று தங்குவது என்ற பயத்தினால் என் கணவரை சகித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறேன் என்றார்.

1. அப்பெண்ணிற்கு தாங்கள் கொடுக்கும் அறிவுரை என்ன?
2. சட்டரீதியிலான அணுகுமுறை என்ன?




## அமர்வு 4

**பயிற்சியாளர்களுக்கிடையில் சிந்தனையை தூண்டுவதற்கும், பேச்சு திறனை வளர்ப்பதற்கும் ஓர் சில தலைப்பில் பட்டிமன்றம் நடத்துதல்.**

1. பெண்கள் அரசியலில் ஈடுபடுவதினால் ஏற்படும் நன்மைகள் தீமைகள் என்ன?
2. பெண்களின் அரைகுறை ஆடையே பாலியல் வன்முறைக்கு காரணமா?
3. பெண்கள் வீட்டு வேலை செய்யாமல் இருந்தால் ஆண்கள் பெண்களை அடிப்பது சரியா?

## பயிற்சியின் மாதிரி – இரண்டாம் நாள்



இந்த இரண்டாம் நாளில் பெண்களுக்கான உரிமைகள், பெண் பாதுகாப்பு சட்டங்கள், பெண்களின் திருமண நிலை (விவாகரத்து, ஜீவானம்சம்), சொத்துரிமை போன்ற அடிப்படை விஷயங்களை பற்றிய புரிதலை பயிற்சியாளர்களுக்கு ஏற்படுத்துதல். அதன்படி ஒவ்வொரு அமர்வுகளாக பிரித்து வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

### வகுப்புகளுக்கான தலைப்புகள்...

- ✓ பெண்களும் அடிப்படை உரிமைகளும்,
- ✓ பெண்களும் இந்திய தண்டணை சட்டமும்,
- ✓ குடும்பநலசட்டம்(திருமணம், விவாகரத்து, ஜீவனாம்சம், சொத்துரிமை)
- ✓ வரதட்சனை தடுப்புச் சட்டம்
- ✓ பெண்களும் குடும்ப வன்முறையும்,
- ✓ பெண்களும் பணியிடத்தில் வன்முறையும்
- ✓ பாலியில் வன்முறைகளிலிருந்து சிறாரைப் பாதுகாக்கும் சட்டம்

பெண்களுக்கு வன்முறை ஏற்பட்டால் நீதிமன்றத்தையோ அல்லது காவல் நிலையத்தையோ எவ்வாறு நாட வேண்டும் என்று பயிற்சியாளர்களை மேம்படுத்துதல். அதன்படி,

- ➢ புகார் எழுதும் முறை
- ➢ முக்கிய வழக்குகளின் பின்னணி மற்றும் விளக்கங்கள்

ஆகியன முக்கிய அமர்வுகளாக இடம்பெறுகின்றன.

## பெண்கள் மீதான வன்முறைகள் – ஒரு பார்வை

## அமர்வு 1

இந்த அமர்வு பெண்கள் மீதான வன்முறைகள் குறித்த தகவல்களையும், புள்ளி விபரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. சட்டங்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு முன் இது உதவியாக இருக்கும்.

### இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறை



தேசிய மகளிர் ஆணையத்தின் கூற்றுப்படி, இந்தியாவில் சுமார் 26% பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது குடும்ப வன்முறையை அனுபவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கும் ஒரு பெண் தற்கொலைக்கு தள்ளப்படுகிறாள் அல்லது வரதட்சணைக்காக துன்புறுத்தப்படுகிறாள். ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கும் ஒரு பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறாள். இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தீர்வுகாண சட்டங்கள் உள்ளன, இதில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க, பெண்களை பாதுகாக்க, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட உதவி எண்கள் உள்ளன.


### தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்





தமிழகத்தில் பெண்களுக்கு எதிராக அதிகமாக நடக்கும் குற்றங்கள், சம்பவங்கள் என்றால் அவை கணவரால் ஏற்படும் வன்கொடுமைகள், பெண் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள், பெண்களை துன்புறுத்துதல் மற்றும் வரதட்சணை கேட்டு கொடுமை செய்தல் ஆகியவையே அதிகமாக பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்களாக பதிவாகியுள்ளது. அதன்படி கடந்த 2021-ம் ஆண்டு பெண்களுக்கு எதிராக நடைபெற்றுள்ள வன்முறைகள் குறித்த புள்ளிவிவரம்:


2021ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டு கைதானவர்கள் மொத்தம் 12,653. இதில் ஆண்கள் 10,998 பெண்கள் 1,655. இதில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டவர்கள் 635 பேர். இதில் ஆண்கள் 594, பெண்கள் 41பேர். குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்த விவரம் மொத்தம் 8064. இதில் ஆண் குற்றவாளிகள் 7165, பெண்கள் 899 என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான அதிகம் நடைபெற்ற வன்முறை சம்பவங்களின் விவரங்கள் வரைபடத்தில்:**




பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடகள் அவையால் தொடங்கப்பட்ட இந்த நாள் உலகம் முழுவதும் 16 நாடுகளில் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அவையின் அறிக்கையின்படி, உலகில் பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஏதேனும் ஒரு கட்டத்தில் ஏதாவது ஒருவித வன்முறையை எதிர்கொள்கின்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பாதிக்கப்பட்ட 10 பெண்களில் 1 பெண் மட்டுமே, குற்றவாளிகளுக்கு எதிராக அதிகாரப்பூர்வ புகார் அளிக்க முன் வருகிறார். இந்த நிலை மாற வேண்டும் என்பதற்காகவே பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு செயல்பட்டு வருகிறது.

# இந்தியாவில் பெண்கள் உரிமைக்கான சட்டங்கள்



1947-ம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலைப்பெற்று இருந்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளிலும், பெண்களின் மீதான தாக்குதல்களும் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதனை தடுக்கும் வகையில் அரசு பல நடவடிக்கைகளை எடுத்தள்ளது. பெண்களின் உரிமையைக் காக்க பல நல்ல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. குறிப்பாக:


1. சதி தடைச் சட்டம் 1829
2. இந்து விதவை மறுமணச் சட்டம் 1857
3. குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் 1872
4. குடும்ப நலச் சட்டங்கள் (இந்து, இசுலாமியர், கிறித்தவர் தனிச்சட்டங்கள்)
5. இந்திய தண்டனைச் சட்டம் 1860
6. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் 1961
7. சம ஊதியச் சட்டம் 1976
8. குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005
9. இலவச கட்டாயக் கல்விச்சட்டம் 2009
10. வேலை செய்யும் இடங்களில் பாலியல் வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2013.

## பெண்களும் அடிப்படை உரிமைகளும்

**அமர்வு 2**

### இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950

1947-ம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்ற பின்பு இந்தியா இறையாண்மை கொண்ட சமதர்ம, சமயச் சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு அமைத்திட உறுதிபூண்டு அனைத்து குடிமக்களும் சமூக, பொருளதார, அரசியல் நீதி போன்றவை வாயிலாக எண்ணத்தை வெளிப்படுத்துதலில், பற்று உறுதியில், வழிபடுதலில் சுதந்திரம் மற்றும் தகுதியின் மூலம் வாய்ப்புரிமையிலும் சமத்துவம் பெறவும், அதை இந்திய குடிமக்கள் யாவரிடத்திலும் மேம்படுத்தவும், தனி நபர் மாண்பு, நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு கொண்ட சகோரத்துவம் பெறவும் உறுதி செய்து, 1949-ம் ஆண்டு




நவம்பர் 26-ம் நாள் இந்திய அரசமைப்பு அவையில் அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்று 1950 ஜனவரி 26 –ம் நாள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் படி, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தெளிவான கோட்பாட்டினை வகுத்துள்ளது. அதாவது, இந்தியாவில் பெண்களுக்கான உரிமைகளும், சட்டங்களும் இன்றளவும் பேசப்படுகின்ற அளவுக்கு அடித்தளம் அமைத்தது இந்திய அரசியலமைப்பு சட்டம் தான். இந்திய குடிமகன் எவர் உரிமை மறுக்கப்பட்டாலும் இச்சட்டத்தின் வாயிலாக உரிமைகளை பெற முடியும்.

## இந்திய அரசியலமைப்பு பெண்களுக்கு வழங்கும் முக்கிய உரிமைகள்:

- **உறுப்பு 14:** சட்டத்தின் முன் அனைவரும் சமம்: அரசின் பொருளாதார மற்றும் சமூகத்தில் சமமான வாய்ப்பு பெறும் உரிமை. குறிப்பாக இதன் மூலம் ஆண், பெண் சமமாக நடத்தப்பட வேண்டும்.
- **உறுப்பு 15(1)(2) :** மதம், இனம், சாதி, பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது.
- **உறுப்பு 15(3):** பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக சிறப்பு ஏற்பாடுகளை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும்.
- **உறுப்பு 15(4):** சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய சமூகத்தின் நலன்களை மேம்படுத்துதல்.



- **உறுப்பு 16**: பொது(அரசு) பணியிடத்தில் பெண்களுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- **உறுப்பு 23:** பெண்களை வாங்குவது, விற்பது, வலுக்கட்டாயமாக வேலைக்கு அமத்துவதற்கான தடை.
- **உறுப்பு 25:** பெண்களுக்கு அவர்கள் மனச்சாட்சியின் படி செயல்பட அவர்கள் விரும்பிய மதத்தைத் தேர்ந்தெடுக்க மற்றும் பின்பற்ற உரிமை உண்டு.
- **உறுப்பு 37(a):** ஆண்களும், பெண்களும் வாழ்க்கையை சரிநிகராக வாழ்வதற்கு உரிமை உண்டு.
- **உறுப்பு 37(d):** சமவேலைக்கு சம ஊதியம் பெற பெண்களுக்கும் உரிமை.

- **உறுப்பு 39(A)** சமவாய்ப்பின் அடிப்படையில் நீதியை மேம்படுத்தவும், பொருளாதாரம் அல்லாத பிற காரணங்களால் எந்தவொரு (பெண்கள்)குடிமகனுக்கும் நீதியைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தல்.
- **உறுப்பு 42:** நீதி மற்றும் மனிதாபிமான வேலை நிலைமைகளையும், பேறுகால நிவாரண உதவி கிடைக்க பெண்களுக்கு அரசு ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- **உறுப்பு 51(A)(e) :** பெண்களின் கண்ணியத்தை இழிவுபடுத்தும் செயல்களை கைவிடுமாறு ஒவ்வொரு குடிமகனுக்கும் வலியுறுத்துகிறது.
- **உறுப்பு 300(A)-ன்** கீழ் பெண்களுக்கான சொத்துரிமை பற்றி எடுத்துரைக்கிறது.
- **உறுப்பு: 243 (D)(3) :** பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகளில் உள்ள மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பெண்களுக்கு இடம் ஒதுக்கப்படுதல் வேண்டும்.



## குடும்ப நலச் சட்டங்கள்
## இந்து, இசுலாமியர், கிறித்தவர் தனிச் சட்டங்கள்

## அமர்வு 3

### இந்தியாவில் தனிச் சட்டங்களின் கீழ் பெண்களின் உரிமைகள்:

ஒருவர் ஒரு நாட்டில் வசித்தாலும் (resident) அல்லது அந்நாட்டின் குடியானவராக (citizen) இருந்தாலும், அவர் ஒரு குறிப்பிட்ட மதத்தை சார்ந்தவராக இருக்கிறார் என்பதற்காக, அவர் ஒரு தனிப்பட்ட சட்டத்தால் மட்டும் ஆட்சிசெய்யப்படும் பொழுது அச்சட்டம் தனிசட்டம் என்று அழைக்கப்படுகிறது. தனிச்சட்டம் இன்னும் நடைமுறையில் இருக்க முக்கிய காரணம் மக்களின் மத உணர்வுகளை மதிக்கவேண்டும் என்பதாலேயே!



திருமணம் மற்றும் விவகாரத்து, பராமரிப்பு, ஆகிய விஷயங்களில் அவரவர் பின்பற்றும் மதத்தின் அடிப்படையிலும், பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக மரபுகள் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டிருப்பதே தனிச் சட்டங்கள் ஆகும்.

# இந்து மதத்தினருக்கான சட்டங்கள்



இந்து திருமணச் சட்டம் 1955



இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச்சட்டம் 1956



இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956

## இந்து திருமணச் சட்டம் 1955

இந்து திருமண சட்டம் என்பது இந்து சமயத்தை சார்ந்தவர்கள் மேற்கொள்ளும் திருமணத்திற்காக இயற்றப்பட்டதாகும். இச்சட்டத்தின் மூலமாகவே இந்து சமய திருமணங்களும், திருமண முறிவுகளும் (விவாகரத்து) நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படுகின்றன. இந்த சட்டம் இந்தியாவில் வாழுகின்ற இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பார்சி தவிர பிற அனைத்துமத மக்களுக்கும் பொருந்தும்.

## இந்து திருமணத்தின் போது நினைவில் கொள்ள வேண்டியவைகள்:

இந்து திருமணச்சட்டம் பிரிவு 5–ன் படி இரண்டு இந்துக்களுக்கிடையே திருமணம் செய்து கொள்ள இருக்கும் நபர்களுக்கு ஏற்கனவே உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணை இருக்கக்கூடாது. ஏற்கனவே திருமணம் ஆகியிருந்தால் சட்டப்படி விவாகரத்துப் பெற்றிருக்கவேண்டும்.

- திருமணம் செய்யும் போது, ஒருவர் ஹோமம் வளர்த்தல் மற்றும் மணமக்கள் தீயைச் சுற்றி ஏழு அடி (சப்தபதி சடங்கு) எடுத்து வைத்து வலம் வருதல் ஆகிய சடங்குகள் செய்தால் திருமணம் நிறைவு பெறும்.
- ஒருவர் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருக்கக்கூடாது.
- குழந்தைகள் பெறுவதற்கு தகுதியற்றவராக இருந்தாலும் திருமணம் செல்லுபடியாகாது.
- திருமண சமயத்தில் மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகி இருக்க வேண்டும் (குழந்தை திருமணத் தடுப்புச்சட்டம் 1978).

- திருமணம் செய்யும் நபர்கள் தடை செய்யப்பட்ட உறவினர்களாக இருக்கக்கூடாது. (உம் சகோதரன்- சகோதரி, மாமனார்- மருமகள், மாமியார்-மருமகன்.)

**இந்துச் சட்டத்தின் கீழ் விவாகரத்திற்கான காரணங்கள்:**

1. திருமணத்தில் குறை
2. திருமண வாழ்வில் கொடுமை
3. ஒப்புதல் (சம்மதம்)

விவாகரத்திற்கான இந்துச் சட்டம் முழுவதும் ஆங்கில சட்டத்தையும், தீர்ப்புகளையும் அடிப்படையாகக் கொண்டது. விபச்சாரம், சித்திரவதை செய்தல், கைவிடுதல், மனநிலை பாதித்தல், தொழுநோய், பாலியல் உறவு வாழ்வுக்கு ஓராண்டு அதற்கு மேலும் ஒத்துழைக்கவில்லை என்ற காரணங்கள் மற்றும் இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்துப் பிரிதல் ஆகியவை விவாகரத்திற்கான காரணங்கள் ஆகும். கணவனோ அல்லது மனைவியோ எந்தவிதமான நியாயமான காரணமும் இல்லாமல் தாம்பத்திய உறவுக்கு மறுக்கும் போது, பாதிக்கப்பட்டவர் தாம்பத்திய உறவை மேற்கொள்ள சேர்ந்து வாழ தீர்ப்பாணை வழங்கும்படி மாவட்ட நீதிமன்றத்தில் மனு செய்து கொள்ளலாம்.

திருமணம் செய்து கொண்ட நபர், வேறு திருமணம் செய்திருந்தாலோ அவ்வாறு திருமணம் செய்தவர் விவாகரத்துப் பெறாமல் இருந்தாலோ இரண்டாம் திருமணம் செல்லாததாகிவிடுகிறது. மேலும் தடை செய்யப்பட்ட உறவு முறைகளுக்குள் செய்யப்படும் திருமணம் முற்றிலும் சட்டத்தால் விலக்கப்படுகிறது.

திருமணம் செய்யும் நபர் குழந்தை பெறும் தகுதியற்றவராக இருந்தாலோ மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்தாலோ அத்திருமணம் செல்லாது. திருமணம் செய்பவரிடம் மோசடியாக ஒப்புதல் பெறப்பட்டாலோ மனைவி திருமண காலத்தில் வேறொருவர் மூலம் கர்ப்பமாக இருந்தாலோ அத்திருமணம் செல்லாது.

# கிறித்தவ மதத்தினருக்கான சட்டங்கள்



இந்திய கிறிஸ்தவ திருமணச் சட்டம் 1872



இந்திய விவாகரத்து சட்டம் 1869




இந்திய வாரிசு சட்டம் 1939

## கிறித்தவ திருமணச் சட்டம் 1872

திருமணம் செய்து கொள்ளும் ஆண் பெண் இருவரில் ஒருவர் கிறிஸ்த்தவராக இருந்தாலும், அவருடைய திருமணம் இந்தச் சட்டத்தின்படி தான் நடக்கவேண்டும். தம்பதியர்களில் ஒருவர் இந்துவாகவோ, இஸ்லாமியராகவோ இருந்தால் இத்திருமணம் செல்லாது.

## திருமண சடங்கு முறைகள்

- கிறிஸ்துவ மதத்தில் திருமணம் திருச்சபையில் மதகுரு முன்னிலையில் நடைப்பெறும்.
- மாங்கல்யம் அணிவித்தல் மாலை மாற்றிக்கொள்ளுதல் நடைமுறையில் உள்ள வழக்கங்களாகும். மணமக்களும் சாட்சிகளும் திருச்சபை திருமணப் பதிவேட்டில் கையேழுத்திட்டுப் பதிவு செய்வதும் நடைமுறையில் உள்ளது.



## கிறித்துவ திருமணத்தின் போது நினைவில் கொள்ள வேண்டியவைகள்:

- ஆணின் திருமண வயது 21. பெண்ணின் வயது 18.
- கணவன் ஆண்மை தன்மை இல்லாதிருந்தால், திருமணம் செல்லாது.
- கணவன் மற்றும் மனைவி இருவரும் தடைசெய்யப்பட்ட ரத்த உறவு சம்பந்த அல்லது கொள்ளுரவு முறையில் இருக்கக்கூடாது.
- திருமணத்தின் போது கணவன் அல்லது மனைவி புத்திசுவாதிமற்றவராக இருக்கக்கூடாது.
- கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும்போது வேறு திருமணம் புரிதல் கூடாது.

## கிறித்துவ திருமண விவாகரத்திற்கான காரணங்கள்:



இந்திய விவாகரத்துச் சட்டத்தில் உள்ள பிரிவு 10 விவாகரத்திற்கான காரணங்களை தருகிறது. இச்சட்டத்தின்படி விபச்சாரத்தினைக் காரணம் காட்டி மட்டுமே ஆண் விவாகரத்து பெறமுடியும். ஆனால் பெண், விபச்சாரத்தை மட்டும் காரணம் காட்டி விவாகரத்து பெறமுடியாது. பெண், விபச்சாரத்தைக் காரணமாகக் காட்டும் போது அது உறவுமுறை மீறிய விபச்சாரமாகவோ அல்லது கைவிடுதலுடன் கூடி விபச்சாரமகவோ, சித்திரவதையுடன் கூடிய விபச்சாரமாகவோ இருக்க வேண்டும்.

# இசுலாமிய மதத்தினருக்கான சட்டங்கள்

## இசுலாமிய திருமணச் சட்டம்



இசுலாமிய தனிநபர் ஷரியத் சட்டம் 1937



இசுலாமிய மணஉறவு கலைக்கும் சட்டம் 1939

இசுலாமிய திருமணம் என்பது காலவரையற்ற ஆண், பெண் வாழ்க்கை ஒப்பந்தமாகும். எனவே சம்பிராதயங்கள் எதுவும் இல்லாமலே திருமணம் நடைபெற முடியும். இசுலாமியச் சட்டத்தில் திருமணம் ஒரு ஒப்பந்த உறவாக உள்ளது. திருமணம் செய்யும் இருவரும் நிபந்தனைகளை உருவாக்கிக் கொள்ள முடியும். இசுலாமிய ஆண் நான்கு திருமணம் செய்துகொள்ளலாம்.

## இசுலாமிய திருமணத்தின் போது நினைவில் கொள்ள வேண்டியவைகள்

- ❖ திருமணத் தரப்பினர் தெளிவான மனநிலையில் இருத்தல்.
- ❖ 15 வயது நிரம்பியவர் சம்மதத்தின் அடிப்படையில் திருமணம் புரியலாம்.
- ❖ மாற்று மதத்தினரை மணக்க இயலாது.
- ❖ கணவன் மனைவிக்கு மணக்கொடை கொடுக்க வேண்டும்.

## இசுலாமிய திருமண விவாகரத்திற்கான காரணங்கள்:

- கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவர் இஸ்லாத்தை துறந்து வேறு ஒரு மத்தைத் தழுவினால், உடனே அத்திருமண ஒப்பந்தம் முறிந்து விடுகிறது.
- தொடக்கத்தில் இசுலாம் நீதிமன்ற விவாகரத்தையும், நீதிமன்றத்திற்கு வெளியே செய்து கொள்ளும் விவாகரத்தையும் அங்கீகரித்துள்ளது. சில காலகட்டங்களுக்கு பிறகு இசுலாமியச் சட்டம் மாற்றப்பட்டுள்ளது. எந்தக் காரணமம் இல்லாமல் “தலாக்” சொல்லி மனைவியை விவாகரத்து செய்ய இசுலாமிய கணவனுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. பெண்ணைப் பொறுத்தவரையில், தலாக் சொல்லி கணவனை விவாகரத்து செய்ய வேண்டுமானால் திருமண ஒப்பந்த சமயத்திலேயே ஏற்படுத்தப்படுகின்ற நிபந்தனையில் இது சேர்ககப்பட்டிருந்தால்தான் முடியும். சாதரணமாக இசுலாமிய பெண் விவாகரத்து வாங்க இசுலாமிய மணமுறிவுச் சட்டத்தின் அடிப்படையில் காரணங்களைக் காட்டி நீதிமன்றத்தைத் தான் நாடவேண்டும். கணவனைக் காணவில்லை, ஜீவனாம்சம் வேண்டும், சிறையில் அடைக்கப்படுதல், திருமணக் கடைமைகளை செய்யத் தவறுதல், ஆண்மை இழந்த நிலை, மனநோய், தொழுநோய், சித்திரவதை போன்றவை விவாகரத்திற்கு சட்ட அடிப்படையிலான காரணங்களாகும்.

## சுயமரியாதை திருமணம் சட்டம் 1967

தமிழ்நாட்டில் சுயமரியாதைத் திருமணம் மதச்சடங்குகளையும், புரோகிதரையும் வைத்து நடப்பதில்லை. இந்து திருமணச் சட்டம் (சென்னை திருத்தம்) 1967. என்ற சட்டத் திருத்தத்தின்படி மதச் சடங்குகளை பின்பற்றத் தேவையில்லை. மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து, மற்றவர்க்கு புரியும் மொழியில், கணவனாக அல்லது மனைவியாக மற்றவரை ஏற்றுக் கொள்கிறேன் என்று உறவினர்கள், பெரியவர்கள் அல்லது நண்பர்கள் முன்னிலையில் கூறினால் போதுமானது, அல்லது மாலையோ, மோதிரமோ மாற்றிக் கொள்ளலாம். இச்சட்டம் தமிழ்நாட்டுக்கு மட்டுமே பொருந்தும்.

## சிறப்புத் திருமணச் சட்டம் 1954

ஒவ்வொரு மதத்தினருக்கும் அவர்களுக்கென தனித்தனி திருமணச்சட்டங்கள் உள்ளன என்பதை அறிவோம். வெவ்வேறு மதம், சாதியினர்களுக்கு இடையே நடைபெறும் (சாதி மத மறுப்புத் திருமணங்கள்) திருமணங்களை அங்கீகரிக்கும் சட்டம் இது. எந்த இரண்டு நபர்கள் வேண்டுமானாலும் இச்சட்டத்தின் படி திருமணம் செய்துகொள்ளலாம். இந்தியரும், வெளிநாட்டினரும் கூட இச்சட்டத்தின் கீழ் அதன் வழிமுறைக்குட்பட்டு திருமணம் செய்து கொள்ளலாம்.

## நீதிவழிப் பிரிவு



நீதிவழிப் பிரிவு என்பது தற்காலிமாக தம்பதிகளை பிரிந்திருக்க நீதிமன்றம் சட்டப்பூர்வமான அனுமதி அளித்தலாகும். நீதிமுறைப் பிரிவு அளிக்கப்பட்டாலும் திருமணம் செல்லாததாகி விடாது. இந்நிலையில் அவர்கள் வேறு திருமணம் செய்து கொள்ள முடியாது.

விவாகரத்து என்பது திருமணத்தின் சட்டபூர்வமான உறவின் கலைப்பு ஆகும். அங்கு வாழ்க்கைத் துணைவர்கள் கணவன் மற்றும் மனைவியாக இருப்பதை நிறுத்துவார்கள். நீதித்துறை பிரிவு என்பது விவாகரத்திலிருந்து வேறுபட்டது. ஏனெனில் திருமணம் அப்படியே உள்ளது. ஆனால் தம்பதியினர் தனித்தனியாக வாழ அனுமதிக்கப்படுகிறார்கள்.

## நீதிவழிப் பிரிவு எப்போது வழங்கப்படலாம்?

- தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பிரிந்திருந்தால்,
- மனைவியை கொடுமை செய்தால்,
- எவரேனும் ஒருவர் ஒரு ஆண்டுக்கும் குறையாமல் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால்,
- தொற்றிக் கொள்ளக் கூடிய பாலியல் நோயால் பீடிக்கப்பட்டிருந்தால்,
- எவரேனும் ஒருவர் மன நோய்க்கு உள்ளாகி இருந்தால்,
- திருமணத்திற்குப் பிறகு பிறருடன் உடலுறவு கொண்டிருந்தால்.

அதே வேளையில் நியாயமான காரணங்களுக்காக மட்டுமே நீதிமுறைப்பிரிவு வழங்கப்படும். கணவன் வேறொருத்தியுடன் வாழ்ந்தால் மனைவி பிரிந்து போனால், மனைவி கைவிடப்பட்டுவிட்டாள் என்ற அடிப்படையில் நீதிமுறைப் பிரிவு வழங்கப்பட மாட்டாது.

இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 10–ன் படி திருமணமான இந்துக்கள் மட்டுமே கணவன் அல்லது மனைவி நீதிவழிப் பிரிவைக் கோர முடியும். அதே போல் இந்திய விவாகரத்து சட்டம் 1869 பிரிவு 22–ன் படி திருமணமான கிறிஸ்தவர்கள் மட்டுமே அதாவது கணவனோ மனைவியோ நீதிவழிப் பிரிவு கேட்கமுடியும்.

சிறப்பு திருமணம் சட்டம் 1956 பிரிவு 23–ன் கீழ் திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவி நீதிப்பிரிவு கேட்கமுடியும்.

## விவாகரத்து பற்றிய ஒரு சில உண்மைகளும் கட்டுக்கதைகளும்....

**கட்டுக்கதை**

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டு கணவன் விவாகரத்து செய்ய விரும்பினால் கிராமப் பெரியவர்களிடம் கூட்டத்தைக் கூட்டி விவாகரத்து பெறலாம்.

**உண்மை**

விவாகரத்து அல்லது பிரிவினையை கட்டாயப்படுத்த பஞ்சாயத்துக்கோ அல்லது கிராமத்திற்கோ அதிகாரம் கிடையாது. விவாகரத்து என்பது சட்டபூர்வ செயல்முறை. பஞ்சாயத்தின் விருப்படி விவாகரத்து அல்லது பிரிவினை வழங்க முடியாது.

**கட்டுக்கதை**

மக்கள் பெரும்பாலும் திரைப்படங்களில் வருவது போல் விவாகரத்து என்பது முத்திரையிடப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது என்று பலர் நினைக்கிறார்கள்.

**உண்மை**

இதுவும் உண்மையல்ல. ஒரு பெண் தன் கணவனை விவாகரத்து செய்ய ஒப்புக்கொண்ட காகிதத்தில் கையெழுத்திட்டால் அது விவாகரத்து முடிந்துவிட்டது என்று அர்த்தமில்லை. முறையான சட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**கட்டுக்கதை**

மனைவி விவாகரத்து வழக்கை முதலில் தாக்கல் செய்தால், கணவன் ஜீவனாம்சம் கொடுக்கத் தேவையில்லை.

**உண்மை**

கணவன் மனைவி இருவரில் யார் முதலில் வழக்கு தாக்கல் செய்தாலும், தகுந்த காரணங்கள் இருந்தால் மனைவி ஜீவனாம்சம் கேட்டு மனுதாக்கல் செய்யலாம்.



## விவாகரத்துக்கான காரணங்கள்
## இந்து, முஸ்லிம், கிறித்துவம்
## அடிப்படையில் ஒப்பிட்டு விளக்கப் படம்

| விவாகரத்திற்கான காரணங்கள் | இந்து | முஸ்லீம் | கிறித்தவம் |
|---|---|---|---|
| கணவன் மனைவி இருவரில் யார் ஒருவராவது மற்ற தம்பதியல்லாத வேறு நபருடன் உடலுறவு கொண்டால் | ✓ | ✓ | ✓ |
| கொடுமை | ✓ | ✓ | ✓ |
| 2வருடத்திற்கு பிரிந்து இருத்தல் | ✓ | ✓ | ✓ |
| மனநலம் பாதிப்பு | ✓ | ✓ | ✓ |
| குணபடுத்தமுடியாத நோய் | ✓ | ✓ | ✓ |
| மதம் மாற்றம் | ✓ | ✓ | ✓ |
| 7 ஆண்டுகள் காணாமல் போனால் | ✓ | ✓ | ✓ |
| துறவறம் | ✓ | ✓ | |

| ஜீவனாம்சம் – வாழ்க்கைப்பொருளுதவி | | |
|---|---|---|
| ***சட்டங்கள்*** | **ஜீவனாம்சம் பெறுவதற்கான காரணங்கள் (இந்து, கிறிஸ்துவ, இசுலாமிய திருமணச் சட்டங்கள்)** | **எந்த சட்டத்தின் கீழ் ஜீவனாம்சம் கோரலாம்?** |
| ***இந்து திருமணச் சட்டம்*** | மனைவியை கைவிடுதல், கொடுமைப்படுத்துதல், வேண்டுமென்றே தேவையானதைக் கொடுக்காமல் ஒதுக்கிவிடுதல் மற்றும் தொழுநோய் போன்ற காரணங்களுக்காக ஒரு பெண் ஜீவனாம்சம் பெற முடியும். ஒரு கணவன் இன்னொரு மனைவியோடு இருந்தால் அல்லது வைப்பாட்டியோடு அதிகாரபூர்வமாக இருந்தால் அல்லது வைப்பாட்டியோடு தனது அதிகாரபூர்வ மனைவி வசிக்கும் வீட்டிலேயே வசித்தால் அல்லது வைப்பாட்டியின் வீட்டிலேயே வசிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தால், ஒரு மனைவி தனி ஜீவனாம்சம் கேட்கலாம். | குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125-ன்படி விவாகரத்துப் பெற்ற மனைவி குற்றவியல் நீதிமன்றத்தில் தனக்காகவும் தன்னுடைய |

| | | |
|---|---|---|
| ***கிறித்துவ திருமணச் சட்டம்*** | இந்தியாவில் கிறிஸ்துவ மனைவி சிவில் கோர்ட்டின் வழியாக ஜீவனாம்சம் கேட்க தனிப்பட்ட சட்ட வழிமுறை இல்லை. ஆனால் சில உயர்நீதிமன்றங்கள் நீதி சமத்துவம், நல்ல மனச் சான்று அடிப்படையில் கிறிஸ்தவ மனைவியும் சிவில் கோர்ட் மூலம் வழக்கு தொடரலாம் என்று தீர்ப்புகள் கூறியுள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125-ன் படி மனைவி ஜீவானம்சம் கேட்கலாம். மனைவி என்ற வார்த்தை விவாகரத்து பெற்ற மனைவியையும் உள்ளடக்கியது. | குழந்தைகளுக் காகவும் ஜீவனாம்சம் கோரி மனு செய்யலாம். |
| ***இசுலாமிய திருமணச் சட்டம்*** | இசுலாமிய சட்டத்தின்படியும் ஒரு மனைவி ஜீவனாம்சம் பெற தகுதிபெறுகிறாா். ஜீவனாம்சம் கொடுக்கும் பொறுப்பு தனிமனிதா் சாா்ந்தது. ஆனால் மனைவி உரிய வயது அடைகிறபோதுதான் கணவன் பொறுப்பாளி என்பது எழுகிறது. கணவன் ஜீவனாம்சம் கொடுக்க மறுக்கும்போது, மனைவி சிவில் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கலாம். ஆனால் விவாகரத்து பெற்ற இசுலாமிய மனைவி பிரிவு 125 –ன் படி ஜீவனாம்சம் பெற தகுதியற்றவா். ஆனால் கணவன் ஒத்துக்கொண்டால் ஜீவனாம்சம் பெறலாம். | |

## இரண்டு வகையான ஜீவானம்சம்:

**1. இடைக்கால ஜீவானம்சம்**

விவாகரத்து, நீதிவழிப்பிரிவு மற்றும் திருமண உரிமைகளை மீட்டெடுப்பது போன்ற வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது, இதைக் கோருவதற்கு பிரதான மனுவுடன் தனி விண்ணப்பம் செய்ய வேண்டும். **ஊதாரணமாக** : சரிதா என்ற பெண் மீது விவாகரத்து கேட்டு அவரின் கணவா் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தாா். வழக்கு நடந்துக்கொண்டிருந்த போது இடைக்கால நிவாரணம் கேட்டு சரிதா மனுசெய்திருந்தாா். சரிதாவின் கணவா் சுரேஷ் சரிதாவிற்கு மற்ற ஒருவருடன் தொடா்பு இருப்பதாகவும் அதனால் அவருக்கு இடைக்கால பராமரிப்பு கொடுக்கமுடியாது என்றும் குற்றம் சாட்டினாா். மனைவி மீது குற்றச்சாட்டு நிரூப்பிக்கும் வரை அவள் நிரபராதியாகக் கருதப்படுவாள் என்று நீதிமன்றம் கூறி இடைக்கால ஜீவனாம்சம் வழங்க தீா்ப்பளித்தது.

**2. நிரந்தர ஜீவனாம்சம்**

விவாகரத்து, நீதிவழிப்பிரிவு, திருமணத்தை ரத்து செய்தல் போன்ற உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே நிரந்தர ஜுவானம்சம் வழங்கப்படும். நிரந்தர ஜீவானம்சம் ஒரு முறை மொத்தத் தொகையாகவோ அல்லது பகுதியாகவோ வழங்கப்படும்.

## பெண்கள் & இந்திய தண்டனைச் சட்டம் – 1860

## அமர்வு 4



திறன் மேம்பாட்டு பயிற்சியில் பயிற்சியாளர்களுக்கு இந்திய தண்டணைச் சட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தண்டனை விவரங்கள் குறித்து புரிதல் ஏற்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு சட்டங்கள் மீதும், அரசின் மீதும் நம்பிக்கை ஏற்பட்டு பெண்கள் சமூகத்தில் தைரியமாக வாழ முடிவெடுப்பார்கள். மேலும் குற்றம் இழைத்தவர்கள் மீது தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கை மேலோங்கும்.

இச்சட்டத்தில் பெண்களின் பாதுகாப்புக்கெனப் பல பிரிவுகள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதிகரிக்கும் குற்றங்களின் எண்ணிக்கையினால் பல்வேறு திருத்தங்களும் இச்சட்டத்தில் கொண்டுவரப்பட்டன. 2013, 2019 திருத்தச்சட்டங்களில் பெண்களுக்கெதிரான குற்றங்களுக்கு கடுமையான சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

### பெண்களை ஆபாசமாக மற்றும் தவறாக சித்தரித்தல்

**பிரிவு 292** - பெண்களை ஆபாசமாக சித்தரிப்பதை தண்டனைக்குரிய குற்றமாகக் கருதுகிறது. பெண்களை ஆபாசமாக சித்தரித்து பிரசுரங்கள், எழுத்துக்கள், ஓவியங்கள், சித்திரங்கள் மற்றும் உருவங்கள் அல்லது பிற வகையான செயல்களை செய்தால் இரண்டு ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் ரூ.2000 வரை அபராதமும். இதே குற்றத்தை மறுபடியும் செய்வோருக்கு ஐந்து வருடத்திற்குக் குறையாமல் சிறைத் தண்டணை.




**பிரிவு 293** – ஆபாச தொடர்பான நூல்கள், ஓவியங்கள், சித்திரங்கள் ஏதாவது ஒன்றை 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு விற்றாலோ, வாடைகைக்கு விட்டாலோ, விநியோகித்தாலோ மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை.

**பிரிவு 294** – பிறருக்கு தொல்லை தரும் விதமாக பொது இடங்களில் ஆபாச பாடல்கள் (அ) பொது இடங்களுக்கு அருகாமையில் ஆபாசமாக பேசுதல் மற்றும் பாடல்களை ஒலிக்கச் செய்தால் மூன்று மாத சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

## வரதட்சணை மரணம் (பிரிவு 304-B)

பிரிவு 304(B) - ஒரு பெண் தீக்காயத்தாலோ அல்லது அபாயகரமான காயத்தாலோ அல்லது இயற்கைக்கு முரணாகவோ அப்பெண்ணிற்கு திருமணம் நடைபெற்று ஏழு ஆண்டுகளுக்குள் மரணம் நேர்ந்திருந்தால், கணவர் அல்லது அவரது உறவினர்களால், அந்த மரணம் ஏற்பட்ட சிறிது நேரத்திற்கு முன்பு கொடுமைக்கு உள்ளாக்கப் பட்டிருந்தால் அல்லது துன்புறுத்தப்பட்டிருந்தால் இதன் மூலம் அப்பெண் மரணத்தை அடைந்திருந்தால் அது "வரதட்சணை இறப்பு (அ) வரதட்சணைச் சாவு" என்பதாகும்.



## வரதட்சணை என்பதற்கான ஒரு சில உதாரணங்கள்

மலருக்கும் விஜய்க்கும் திருமணம் முடிந்து 2 மாதங்களாகின்றன. அது பெரியோர்களால் நிச்சியிக்கப்பட்ட திருமணம். 2 மாதங்களுக்குப் பிறகு விஜயின் அம்மா மற்றும் அப்பா மலரை அவரது பெற்றோரிடமிருந்து புதிய கார் ஒன்றை வாங்கி தரும்மாறும், கார் வாங்கிக்கொடுத்தால் மட்டுமே வீட்டில் அனுமதி என்று கூறி வலுக்கட்டாயமாக வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டனர்.

இது வரதட்சணை தடைச் சட்டம் 1961 -ன் படி திருமணத்தின்போது அல்லது அதற்கு பிறகு எந்த நேரத்திலும் ஒரு தரப்பினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விலை மதிப்புள்ள எந்தவிதமான அசையும் அசையா சொத்துகளும், பணம், நகை, கேட்பதும் கொடுப்பதும் குற்றமாகும்.

**உதாரணம்:** கங்கா பதினொன்றாம் வகுப்பு மாணவி, வகுப்பறையில் அமைதியாக அமர்ந்திருந்த அவள் மிகவும் மனசோர்வடைந்திருந்தாள். வகுப்பு முடிந்ததும் அவளின் ஆசிரியர் அவளிடம் ஏதாவது பிரச்சனையா..? என்று கேட்டார். அவர் தனது சகோதரி சுதாவை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கணேஷ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், திருமண நாளில் சுதாவின் மாமியார் 15 பவுன் தங்க நகை மற்றும் 3 லட்சம் ரூபாய் ரொக்கம் வரதட்சணை கேட்டதாகவும் தனது ஆசிரியரிடம் கூறினார். கங்காவின் அப்பா கூலி வேலை பார்ப்பவர் கங்காவையும் சேர்த்து அவரின் பெற்றோருக்கு



3 பெண் குழந்தைகள். அதில் மூத்தவர் தான் சுதா. வரதட்சணை கோரிக்கையை நிறைவேற்றும் நிலையில் கங்காவின் அப்பாவின் வருமானம் இல்லை. மூன்று நாள்களுக்கு முன்பு கங்காவின் அப்பாவிற்கு சுதாவின் மாமியரிடமிருந்து அலைபேசி

அழைப்பு வந்தது. சமையலறையில் வேலை செய்யும் போது சுதாவிற்கு தீக்காயம் ஏற்பட்டு அதன் விளைவாக அவர் இறந்துவிட்டார் என்று கூறப்பட்டது. அதற்கு சுதாவின் இறப்பானது வரதட்சணை மரணம் என்று கங்காவிடம் ஆசிரியர் கூறினார்.

இதனால் புகார் அளிக்கப்பட்டு கணவர் மற்றும் கணவரின் குடும்பத்தினர் கைது செய்யப்பட்டனர். இது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304B யின் அடிப்படையில் தண்டிக்கபடக்கூடிய குற்றமாகும். இதில் பெண்ணின் கணவரோ அல்லது கணவரின் உறவினர்களோ பெண்ணை கொடுமைப்படுத்தியதால் மரணம் நேர்ந்தது என்பது உறுதியானால் இந்திய தண்டனைச் சட்டம் 304 - பி பிரிவின் கீழ் இவர்கள் குற்றம் இழைத்தவர்கள் ஆவர். குறைந்தபட்சம் 7ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அதிகப்பட்சம் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படலாம். இதில் இயற்கையாகவோ, விபத்தினாலோ மரணம் அடைந்திருக்கலாம் என்ற சாத்தியங்களுக்கு இடமில்லை.

**கருச்சிதைவு – பிரிவு 312:**

எந்த நபராவது தன்னிச்சையாக அந்த பெண்ணைக் காக்கும் நல்லெண்ணமில்லாது கருச்சிதைவு செய்யத் தூண்டினால் அந்த நபருக்கு 3 வருடம் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். அப்பெண்ணின் கருச்சிதைவு மூலம் விரைவாக குழந்தை பிறந்தால் அக்குற்றத்திற்கு 7 வருடம் சிறை மற்றும் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.



மருத்துவ கருக்கலைப்பு சட்டத்தின்படி, கருவை வளர அனுமதித்தால் அது அப்பெண்ணின் உயிருக்கு ஆபத்தோ அல்லது அத்தாயின் உடல் மற்றும் மன நிலைக்கு ஊறு விளையும் என்றாலோ அல்லது கருவில் உள்ள குழந்தை பிறந்தால் அதற்கு ஊறு விளையும் என்றாலோ, பதிவு செய்யப்பட்ட மருத்துவரால் அக்கருவை கலைத்து விடலாம் என்று கூறப்பட்டுள்ளது. கருச்சிதைவு செய்யும் நபர் மருத்துவராக இல்லாவிட்டால் அந்நபர் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு 313:** ஒரு பெண்ணின் சம்மதம் இல்லாமல் கருவை அழித்தல் குற்றமாகும். அதற்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

**பிரிவு 314:** கருச்சிதைவு விளைவிக்கும் என்னும் உட்கருத்துடன் மரணம் ஏற்படும் என்று தெரிந்தே அப்பெண்ணின் சம்மதமின்றி செய்யப்படும் கருச்சிதைவிற்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

**ஆசிட் தாக்குதல் (அமில வீச்சு)**

**பெண்களுக்கு எதிரான குற்றங்களில் பாலியல் வன்கொடுமை, பலாத்காரம், குடும்ப வன்முறை போன்ற குற்றங்கள் உட்பட அதிக எண்ணிக்கையிலான ஆசிட் தாக்குதல் வழக்குகள் இந்தியாவில் பதிவாகியுள்ளன. தேசிய குற்ற ஆவணக்**

**காப்பகத்தின் (NCRB) அறிக்கையின்படி, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் மொத்தம் 596 ஆசிட் தாக்குதல் வழக்குகள் பதிவாகியுள்ளன. டெல்லியில் ஆசிட் வீச்சு தாக்குதலுக்கு ஆளான "லட்சுமி" என்ற பெண் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதன் வாயிலாக 2013 இந்திய தண்டனை திருத்தச்சட்டத்தில் பிரிவு 326A மற்றும் பிரிவு 326B ஆகியவை ஆசிட் தாக்குதல் மற்றும் ஆசிட் வீச்சு முயற்சிகளுக்கு தண்டனையை பற்றிக் குறிப்பிடுகின்றன.**



**பிரிவு 326**-A அமிலத்தை பயன்படுத்தி கொடுங்காயம் ஏற்படுத்துதல் அக்குற்றத்திற்கு 10ஆண்டுகள் சிறைதண்டனை முதல் ஆயுள் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

**பிரிவு 326–B: ஆசிட் வீச்சுக்கு முயற்சித்தல்** குற்றத்திற்கு **ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை, இது 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் செலுத்த வேண்டியிருக்கும்.**

## நாணத்தைக் (மானத்தை) குலைத்தல்

**பிரிவு 354:** பெண்களின் மானத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் தாக்குதல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துதல் குற்றமாகும். இதற்கான தண்டனை ஓராண்டு முதல் ஐந்தாண்டு வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

## பாலியல் துன்புறுத்துதல் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கான தண்டனை:

**பிரிவு 354** A: உடல் ரீதியான தொடர்பு, விரும்பத்தகாத மற்றும் வெளிப்படையான பாலியல் குறித்து பேசுதல். பாலியல் உறவுக்காக கோரிக்கை அல்லதுபெண்ணின் விருப்பத்திற்கு மாறாக ஆபாச படங்களை காட்டுதல் இந்த செயல்கள் பாலியல் துன்புறுத்தலுக்கான குற்றமாகும். இக்குற்றம் செய்தோருக்கு மூன்று ஆண்டுகள் நீட்டிக்கப்படக்கூடிய கடுமையான சிறைத்தண்டனை அல்லது அபாரதம் அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படலாம்.

**பிரிவு 354** B: எவரேனும் ஒரு பெண்ணின் ஆடைகளை அவிழ்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவளை தாக்குதல் அல்லது கட்டாயப்படுத்துதல். அந்தப்



பெண்ணை நிர்வாணமாக இருக்கச் செய்யும் வகையிலோ தாக்குதல். அத்தகைய செயலுக்கு உடந்தையாக இருந்தாலும் மூன்றாண்டுகள் குறையாமல் ஏழு ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைதண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 354** C: எவர் ஒருவர் ஒரு பெண் தனித்திருக்கும் நிலையில் பிறர் தன்னை பார்த்துவிடக் கூடாது என்ற நிலையில் அந்தரங்கமாக பார்க்கின்ற, புகைப்படம் எடுக்கின்ற அல்லது அந்த புகைப்படத்தை பகிர்கின்ற செயல்.

முதல் முறை குற்றம் செய்தவருக்கு ஓர் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். இராண்டாம் முறை குற்றம் செய்தவருக்கு மூன்று ஆண்டு முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 354** D: ஒரு பெண்ணை பின்தொடர்வது அல்லது தொடர்பு கொள்ள முயல்வது. தனக்கு பேசுவதில் ஆர்வமில்லை என்று அந்தப் பெண் கூறிய பிறகும் அந்தப் பெண்ணிடம் அந்த நபர் தொடர்பு கொள்ள முயற்சி செய்வது.



பெண்ணின் இணையதள பயன்பாடு, மின் அஞ்சல் அல்லது மின்னனு தகவல் தொடர்பு சாதனங்கள் பயன்பாடு போன்றவற்றை கண்காணித்தல்.

பெண்ணை கண்காணித்தல், வேவு பார்த்தல் அதன் மூலமாக அந்தப் பெண்ணிடம் வன்முறை பயத்தை ஏற்படுத்துதல் அல்லது மனதில் மன அழுத்தத்தை ஏற்படுத்துதல் மற்றும் மன அமைதியை குலைக்கும் வகையில் செயல்படுதல்.

முதல் முறை குற்றம் செய்தவருக்கு மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படகூடிய சிறை தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். இரண்டாம் முறை குற்றம் செய்தவருக்கு 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படகூடிய சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.



**உதாரணம்:** சீமா தனக்காக ஆடை வாங்குவதற்காக துணிக்கடை செல்கிறாள். அவள் தேர்ந்தெடுத்த ஆடையை போட்டு பார்ப்பதற்காக டிரயல் ரூமுக்கு சென்றாள். டிரயல் ரூமில் கேமரா பொருத்தப்பட்டு இருப்பதை சீமா கவனிக்கவில்லை. ஓரிரு மாதங்களில் இணையதள பக்கத்தில் தனது நிர்வாண படத்தினை கண்டு அதிர்ச்சியடைந்தாள். இச்செயலானது பிரிவு 354 ன்படி தண்டிக்கக்கூடிய குற்றமாகும்.

**பிரிவு 366**: விருப்பத்திற்கு மாறாக ஒரு பெண்ணைக் திருமணம் போன்ற விஷயங்களுக்காகக் கட்டாயப்படுத்தி கடத்துதல் அல்லது நயமாக பேசி திருமணம் செய்ய தூண்டுதலும் குற்றமே. இக்குற்றத்திற்கு 10 ஆண்டுகள் சிறையும் அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 366A**: ஒரு இளம்பெண்ணை கட்டாயப் புணர்ச்சிக்கு ஆட்படுத்துதல் - 18 வயது குறைந்த ஒரு பெண்ணை, பிறருடன் கட்டாயப் புணர்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அத்தகைய புணர்ச்சிக்கு அந்த பெண் உட்படுத்தப்படுவாள் என்று தெரிந்திருந்தும், அவளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும்படி, எந்த வகையில் தூண்டினாலும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.



**பிரிவு 366B:** ஒரு பெண்ணை வெளிநாட்டிற்கு புணர்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் என்று ஏற்றுமதி செய்தல் குற்றமாகும். இக்குற்றத்திற்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

**விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்**

**பிரிவு 372, 373**: 18 வயதுக்குட்பட்ட சிறுமியரை விபச்சாரத்திற்குப் பயன்படுத்துவதும், அவர்களை விற்பனை செய்வதும், வாங்குவதும் கடும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு 10 வருட சிறையும் தண்டணையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

**பாலியல் வன்புணர்ச்சி (கற்பழிப்பு)**

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளில் மிகக் கொடிய மனித உரிமை மீறல் பாலியல் வன்புணாச்சியே. அன்றாடம் செய்தித்தாள்களை புரட்டும் போது இத்தகைய செய்திகளையே அதிகம் காண முடிகிறது. 2017 –ம் ஆண்டு கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு பேருந்திலிருந்து தூக்கியெறியப்பட்ட நிர்பயாவின் மரணம் தேசத்தின் மக்களைக் கிளர்ந்தெழுந்து போராடச் செய்தது. நிர்பயாவுக்கு நடந்த கொடூரத்தை அடுத்துதான் பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கான விரைவு நீதிமன்றங்களை அமைக்க நாடாளுமன்றம் முடிவெடுத்தது. விரைவு நீதிமன்றம், டெல்லி உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் எனப் பல நீதிமன்றங்களில் கடந்து 7 ஆண்டுகளுக்கு மேல் நடந்த இந்த வழக்கில், டெல்லி உயர் நீதிமன்றம் குற்றவாளிகளின் மரண தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியதன் மூலம் இந்திய தண்டனை சட்டத்தில் பாலியல் குற்றங்களுக்கான தண்டனைகள் கடுமையாக்கப்பட்டன.



**பிரிவு 375**: ஒரு பெண்ணின் சம்மதமின்றி அவளுடன் உடலுறவு கொள்வது கற்பழிப்பு ஆகும். மேலும் ஒரு பெண்ணை:

- அவளது விருப்பத்திற்கு எதிராக உறவு கொள்தல்.
- குற்றவாளி தனது மேலான உடல் பலத்தைக் கொண்டு உடலுறவு கொள்வது அதாவது அவளையோ அல்லது அவள் விருப்பமுள்ள யாரையோ மரணப்பயத்தில் கொலைசெய்து விடுவேன் அல்லது காயப்படுத்தி விடுவேன் என மிரட்டி சம்மதம் பெற்று உறவுகொள்ளுதல்.
- அவளது ஒப்புதல் இன்றி – எதிர்ப்பைக் காட்டுவதில் பயனில்லை என்பதால் எதிர்ப்புக் காட்டாமல், ஆனால் அவ்வுறவிற்கு எதிராக இருக்கும் போது, அதுவும் கற்பழிப்பாகும்.
- போதை மருந்து அல்லது மயக்க மருந்து கொடுத்து உறவு கொள்வது,
- கணவன் என்று நம்ப வைத்து உறவு கொள்வது குற்றமாகும்.
- பதினெட்டு வயதுக்குட்பட்டவளாக இருக்கும்போது அவள் ஒப்புதல் அளித்தாலும், அளிக்காவிட்டாலும் மேலும் அவனது மனைவியாக இருந்தாலும் அது கற்பழிப்பு குற்றமாகும்.



ஒரு பெண்ணை தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்ச்சி செய்தால் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை முதல் சாகும் வரை சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும். 16 வயதுக்கு குறைவான குழந்தையை பாலியல் வன்புணர்ச்சி செய்தால் 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை முதல் சாகும் வரை சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.



**பிரிவு 376:** பலாத்கார குற்றத்திற்கான தண்டணை.

**பிரிவு 376**A: பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தி அந்த காயத்தின் மூலம் இறப்பு ஏற்பட்டால், 20 ஆண்டுகள் குறையாமல் கடுங்காவல் தண்டனை முதல் ஆயுள்தண்டனை வரை அல்லது சாகும் வரை சிறை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.

**பிரிவு 376**A&B: 12 வயதுக்குட்பட்ட பெண்குழந்தையை பாலியல் வன்புணர்ச்சி செய்தால் அக்குற்றத்திற்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை குறையாமலும் அதிகப்பட்சம் ஆயுள்தண்டனை வரை அல்லது சாகும் வரை சிறை மற்றும் அபராதம் அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.

**பிரிவு 376**B: கணவரிடமிருந்து சட்டப்படி விவகாரத்தின்படியோ அல்லது வேறு வகையிலோ பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் மனைவியின் சம்மதம் இல்லாமல் அவருடன் உடலுறவு வைத்துக் கொண்டால் அதுவும் பாலியல் பலாத்காரம் செய்ததாக கருதப்படும். இதற்கு 2 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 376**C: பொது ஊழியர் அதாவது அதிகாரப் பதவியில் இருப்பவர், தனது பதவி நிலையை பயன்படுத்தி தனது காவல் அல்லது பொறுப்பின் கீழ் உள்ள பெண்ணிடம் உடலுறவு கொள்வதும் குற்றமாகும். அக்குற்றத்திற்கு 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபாதரமும் விதிக்கப்படும்.

**கூட்டு பாலியல் வன்புணர்ச்சி**

**பிரிவு 376**D: ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒருமித்த நோக்கத்துடன் கும்பலாக சேர்ந்து ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுத்துவது, கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக கருதப்படும். அந்த கும்பலில் உள்ள ஒவ்வொருவரும் பாலியல் பலாத்காரம் இழைத்ததாக கருதப்படும்.

கூட்டு பாலியல் வன்புணர்ச்சி குற்றவாளிகளுக்கு 20 ஆண்டுகள் குறைவில்லாமல் கடுங்காவல் சிறைத்தண்டனை முதல் ஆயுள்தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு 376**DA: 16 வயதுக்கு உட்பட்ட குழந்தையை கூட்டு பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கிருந்தால் அந்த நபருக்கு ஆயுள் தண்டனை மற்றும் சாகும் வரை சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.



**பிரிவு 376**DB: 12 வயதுக்குட்பட்ட குழந்தையை கூட்டு பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கிருந்தால் அந்த நபருக்கு ஆயுள் தண்டனை மற்றும் சாகும் வரை சிறை மற்றும் அபராதம் அல்லது மரணதண்டனை விதிக்கப்படும்.

**பிரிவு 376**E: பாலியல் வன்புணர்ச்சி மற்றும் கூட்டு பாலியல் வன்புணர்ச்சியை ஒருவர் செய்து அக்குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்பட்டு மீண்டும் அதே குற்றத்தை அந்த நபர் செய்தால் அவர் தொடர்குற்றவாளியாக கருதப்பட்டு அவருக்கு சாகும் வரை சிறை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.

## இருதாரமணம்

**பிரிவு 494:** கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும் போதே வேறு திருமணம் செய்து கொண்டால், பிரிவு 494-ன் படி குற்றமாகும். விவாகரத்து பெற்றால் மட்டுமே மறுமணம் செய்து கொள்ள முடியும், அப்படி விவாகரத்து பெறாமல் மறுமணம் செய்து கொண்டால் குற்றம், இதற்கு 7 வருடம் சிறையும் அபராதமும் விதிக்கப்படும்.

## கணவரால்(அ)கணவரின் உறவினரால் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகள்

**பிரிவு 498**A: ன் படி ஒரு பெண்ணை அவருடைய கணவர் அல்லது கணவரின் உறவினர்கள் கொடுமைப்படுத்தினால் அந்த நபருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

## வரதட்சணைத் தடை (திருத்த) சட்டம் 1986

## அமர்வு 5

**பிரிவு 3:** நபர் எவரும் வரதட்சணை கொடுக்கவோ வாங்கவோ செய்தாலோ அல்லது அதற்கு உடந்தையாக இருந்தாலோ 5 ஆண்டுகள் குறைவில்லாத சிறைத் தண்டனையும், ரூ.15,000/- குறைவில்லாமல் அபராதமும் விதிக்கப்படும். வரதட்சணைத் தொகை அபராதத் தொகையான ரூ.15,000/-த்தை விட கூடுதலாக இருந்தால், வரதட்சணை தொகையையே அபராதமாக விதிக்கப்படும்.



**பிரிவு 4:** இச்சட்டம் அமலுக்கு வந்த பிறகு மணமகள் அல்லது மணமகனின் பெற்றோர்களிடம் அல்லது காப்பாளர்களிடம் நேரடியாக அல்லது மறைமுகமாக வற்புறுத்தி வரதட்சணை கேட்கும், எந்த நபருக்கும் 6 மாதங்களுக்கு குறைவில்லாமல் இரண்டாண்டுகள் வரையில் சிறைத்தண்டனையும் ரூ.10,000/-க்கு மிகாமல் அபராதமம் விதிக்கப்படும்.

**பிரிவு 4அ:** எந்த ஒரு ஊடகத்திலும் வரதட்சணை கொடுப்பதாகவோ வாங்குவதாகவோ அல்லது திருமணத்திற்கு கைமாறாக சொத்தையோ பணத்தையோ வேறு பொருளாதார நன்மையையோ தருவதாக விளம்பரம் செய்யக் கூடாது. செய்தால் 6 மாதங்களுக்கு குறைவில்லாமலும், ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாத சிறைத் தண்டனையும் அல்லது ரூ10,000/- வரையிலான அபராதமும் விதிக்கலாம்.

**பிரிவு 5:** வரதட்சணை கொடுப்பதற்காகவோ அல்லது வாங்குவதற்காகவோ செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் சட்டப்படி செல்லாது.



**பிரிவு 6(1):** மணமக்களை தவிர்த்து மற்ற எந்த நபரும் திருமணத்திற்கு முன்போ, திருமணத்தின் போதோ திருமணத்திற்கு பிறகோ வரதட்சணை வாங்கியிருந்தால் மூன்று மாதங்களுக்குள் அதனை மணமகளுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மணமகள் இளவராக இருந்தால் 18 வயது அடைந்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

**பிரிவு 6(3):** ஒரு பெண் வரதட்சணையாக கொடுத்த சொத்தை திரும்ப பெறும் முன் அப்பெண் திருமணமாகி ஏழாண்டுகளுக்குள் இயற்கை காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் இறந்துவிட்டால், இப்பெண்ணுக்கு திரும்பவும் கொடுக்கப்பட்ட வேண்டிய வரதட்சணை சொத்தானது அப்பெண்ணின் குழந்தைகளுக்கு மாற்றப்படும். குழந்தைகள் இல்லையேல் அப்பெண்ணின் பெற்றோருக்கு உரியதாகும்.

## குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் – 2005

இந்திய அரசிலமைப்புச் சட்டம் 1950, உறுப்புகள் 14, 15, மற்றும் 21 – கீழ் குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கின்றது மற்றும் சமூகத்தில் குடும்ப வன்முறைகள் நிகழாமல் தடுக்கிறது. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்கு நீதிபோரணைகளை (writs) தவிர மற்றப்படி உரிமையியல் அல்லது குற்றவியல் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் எதுவும் கிடைக்கப் பெறாமல் இருந்தது. அதனால், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 இயற்றப்பட்டது.

### இச்சட்டத்தின் நோக்கம்



✓ பெண்களுக்கு அவர்களது உறவினர்கள் மூலம் ஏற்படும் வன்முறையிலிருந்து பாதுகாப்பை வழங்கும் முதல் சட்டம். இச்சட்டம் குடும்ப வன்முறையை தடுக்கவும், பாதிக்கப்பட்ட பெண்கள் உரிமைகளை வழக்குகள் மூலம் பெற்றுக்கொள்ளவும் துணை நிற்கிறது.

✓ வன்முறையற்ற குடும்பத்தில் வாழ்வதற்காக பெண்களின் உரிமைகளை அங்கீகாரம் செய்வதோடு உரிமைகள் மறுக்கப்படும் போது சட்டப்பூர்வமாக தீர்வு காணவும் உதவி செய்கிறது.

✓ இந்தச் சட்டத்தின் வழியாக தடை உத்தரவுகள், இழப்பீடுகள், பொருளாதார நிவாரணங்களையும் பெறலாம். புகார் கொடுப்பதனால் கைது செய்ய இயலாது. குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உடனடி உதவியைத் தரும் நோக்கமுடையது. குற்றம் செய்த நபருக்கு தண்டனை கொடுப்பது, சிறையில் அடைத்தல், அபராதம் விதிப்பது என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதல்ல.

### குடும்ப வன்முறை



வீட்டில் வசிக்கும் ஓர் ஆண் அவ்வீட்டில் குடும்ப உறவில் உள்ள ஒரு பெண்ணுக்கு தனக்குரிய செயல்பாடுகளில் செய்ய வேண்டியதை செய்யாது தவிர்த்தாலும், செய்யக்கூடாததை செய்தாலும் அது குடும்ப வன்முறையே.

உடல், வார்த்தை, உணர்வு, பாலியல் அல்லது பொருளாதார ரீதியான அவமதிப்புக்கு இட்டுச் செல்லும் நடத்தைகள், தவறான செய்கைகள் அனைத்தும் குடும்ப வன்முறையே. இந்த வன்செயல்கள் ஒரு பெண்ணின் மனநலன் அல்லது உடல் நலனைப் பாதிக்கின்றது. வன்முறை குறித்த அச்சுறுத்தல்களும், குடும்ப வன்முறையாகும்.

ஒரு பெண் அவள் எந்த வயதுடையவராக இருப்பினும் சரி, அவள் வசிக்கும் வீட்டில், உடன் வசிக்கும் எந்தவொரு ஆணும் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு பெண்ணை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டால் அது குடும்ப வன்முறையாகும்.

## குடும்ப வன்முறை நான்கு வகைகள்

**உடல்ரீதியான வன்முறை**

உடல் ரீதியான காயம், பாதிப்பு, அடித்தல், உதைத்தல்,குத்துதல், அச்சுறுத்தல், இன்னும்பிற.

**வார்த்தை /உளவியல் ரீதியான வன்முறை**

அவமானப்படுத்துதல், பட்டப்பெயரிட்டு அழைத்தல், விரும்பிய வேலைக்குச் செல்வதைத் தடுத்தல், நடத்தைப்பற்றி தவறாக பேசுதல், மிரட்டுதல், கேலிசெய்தல், தரக்குறைவாக பேசுதல், குழந்தைப்பேறு இல்லையென சுட்டிக்காட்டுதல். இன்னும் பிற…

**பாலியல் வன்முறை**



கட்டாயப்படுத்தி உடலுறவு கொள்ளுதல், ஆபாச சினிமாக்கள் மற்றும் ஆபாச படங்களைப் பார்க்கச் சொல்லி கட்டாயப்படுத்துதல், இயற்கைக்கு புறம்பான முறையில் உடலுறவு கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்துதல், பருவம் எய்தாத சிறுமிகளை பாலியல் ரீதியாக, நேரடியாகவோ, மறைமுகமாகவோ துன்புறுத்துதல் பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்குட்பட்டவராக இருப்பின் அவரது விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ உடலுறவு கொள்வது போன்றவை.

**பொருளாதார வன்முறை:**


அடிப்படைத் தேவைகளான உணவு, உடை வழங்க மறுத்தல், மதிப்பு வாய்ந்த பொருட்கள் சீதனப் பிறபொருட்கள், சொத்துக்கள் (அசையும்/அசையா), ஆவணங்கள், பெற வேண்டிய வசதிகளை அல்லது வளங்களை கிடைக்கவிடாமல் தடுப்பது அல்லது கட்டுப்பாடுகள் விதிப்பது.

## இச்சட்டத்தால் பாதுகாக்கப்படுவர் யார்?

குடும்ப உறவில் வன்முறைக்கு உட்படுத்தப்படும் எந்த ஒரு பெண்ணும் பாதிக்கப்பட்டவரே. மனைவி மட்டுமல்லாது மகள்கள், சகோதரிகள், கைம்பெண்கள் தாயார்கள் அல்லது ஒரே உறைவிடத்தைப் பகிர்ந்து கொள்ளும் மற்ற உறவுகளாகவும் இருக்கலாம். மணமாகாமல் ஆணுடன் இணைந்து வாழும் பெண்ணும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு பெறுகிறார். மேலும் குடும்ப உறவில் உள்ள எந்த ஆணிடமிருந்தும் (அப்பா.சகோதரர்,கணவன்,மாமனார்) இச்சட்டம் சமமான பாதுகாப்பு அளிக்கிறது.

பாதிக்கப்பட்ட மனைவி அல்லது மணமாகாமல் ஆணுடன் ஒரு கூறையின் கீழ் இணைந்து வாழும் பெண், கணவரின் உறவினர் மீதோ, சம்பந்தப்பட்ட ஆண் மீதோ புகார் அளிக்கலாம்.

## யாரிடம் எங்கே புகார் அளிப்பது?




## புகார் பதிவு செய்தால் அப்பெண்ணுக்குக் கிடைக்கும் தீர்வு

நீதிமன்றத்தின் மூலம் தீர்வு பெறலாம். தேவையான பண உதவியையும், நிவாரணத்தையும் வன்முறையை செய்தவர்களிடமிருந்து பெறலாம். நீதிமன்ற பாதுகாப்பு உத்தரவு மூலம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை தடுக்க முடியும். பாதிக்கப்பட்ட பெண் பணிபுரியும் இடத்திற்கு சென்று தொல்லை தருவதை தடைசெய்யலாம். வன்முறைசெய்பவர் பாதிக்கப்பட்ட பெண்ணுடன் எவ்விதமான தொடர்பையும் (கடிதம்/தொலைபேசி) வைத்துக்கொள்வதை தடைசெய்யலாம். பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர் எவருக்கும் வன்முறை ஏற்படாதவாறும் தடைஉத்தரவு பெறலாம். பொருளாதார ரீதியாக பாதிப்பு ஏற்படுத்தும் எவ்விதமான நடவடிக்கைக்களையும் தடை செய்யலாம்.

**பாதுகாப்பு உத்தரவு – Protection Order (பிரிவு – 18)**

பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களது தற்காலிக பாதுகாப்பு, பராமரிப்பு மீதான உத்தரவை பெறலாம். குழந்தைகளைத் தாயிடமிருந்து பறிப்பதே, உளவியல் ரீதியான வன்முறை மற்றும் அப்பெண்ணைப் பணியிடத்தில் மிரட்டினால் இடைக்கால உத்தரவைப் பெறலாம்.

## **வசிப்பிட/உறைவிட உத்தரவு:** Residence Order **(பிரிவு – 19)**

ஒரு பெண் வீட்டிலிருந்து வெளியேற்றப்படக்கூடும் என்ற அச்சமூட்டும் நிலை இருப்பின் நீதிமன்றம் அப்பெண்ணுக்கு பகிர்ந்து கொள்ளப்பட்ட வீட்டில் வாழ வசிப்பிட உத்தரவு அளிக்கலாம் அல்லது வெளியேற்றப்பட்ட பிறகு திரும்பவும் அதே வீட்டில் வசிக்கும் உத்தரவைப் பெற முடியும். இந்த உத்தரவின் நோக்கம் ஒரு பெண் பாதுகாப்பான உறைவிடம் பெற வேண்டும் என்பதே. சில சமயங்களில் ஒருபெண் வன்முறை புரியும் ஆணுடன் அதே வீட்டில் வசிப்பது பாதுகாப்பற்றது என்று நினைத்தால் அந்த நபரை வீட்டிலிருந்து வெளியேறும்படி மனுதாக்கல் செய்யலாம் அல்லது நீதிமன்றம் வன்முறை செய்த அந்த ஆணை பாதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு வேறு வசிப்பிடம் தருமாறும் உத்தரவிடலாம்.

## **பொருளாதார நிவாரணம்** - Monetary Reliefs **(பிரிவு – 20)**

பாதிக்கப்பட்டவர் இழந்த வருமானத்தை அவருக்கு அளிக்குமாறும், மருத்துவச் செலவுகளைத் தருமாறும், உடமைகள் இழந்திருந்தால் அவற்றை அவருக்கே வழங்கவும் உத்தரவிடலாம். கொடுக்கப்படுகின்ற பணத்தொகை, அன்றாடவாழ்க்கைத் தரத்தைத் தொடர போதுமானதாக இருக்கவேண்டும். பொருளாதார உத்தரவு ஏற்கனவே செய்யப்பட்ட செலவுகளுக்கு ஈடாக மட்டுமே பெற முடியும்.

## **ஒப்படைப்புக் கட்டளை** - Custody Order **(பிரிவு – 21)**



பாதிக்கப்பட்ட பெண் தன்னுடைய குழந்தைகளை தன் பாதுகாப்பின் கீழ் கொண்டு வருவதற்கான உத்தரவு.

## இழப்பீட்டு உத்தரவுகள் - Compensation Orders (பிரிவு-22)



பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கும், மன அழுத்தத்திற்கும், உணர்வு பாதிப்புகளுக்கும், அவமானத்திற்கும் மற்றும் காயங்களுக்கும் உரிய இழப்பீடு வழங்கக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட முடியும்.

## பாதுகாப்பு அதிகாரி: (பிரிவு – 8)

பாதுகாப்பு அதிகாரி மாநில அரசால் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு மாவட்டத்தின் சமூகநலத் துறை அதிகாரியே பாதுகாப்பு அதிகாரியாவார்.

## சேவை மையங்கள்: (பிரிவு –10)



சட்டப்படி பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பெண்களின் உரிமைகள் பாதுகாப்பில் அக்கறையுடைய சட்ட, மருத்துவ, பொருளாதார உதவிகளை செய்து கொடுக்கின்ற அமைப்புகள் சட்டப்பூர்வமாக மாநில அரசிடம் பதிவு செய்து கொள்ளலாம்.

## பாதுகாப்பு இல்லங்களின் கடமைகள்



பாதிக்கப்பட்ட நபரோ அல்லது அவர் சார்பாக பாதுகாப்பு அலுவலரோ அல்லது சேவை மையமோ பாதுகாப்பு இல்லத்தில் தங்க அனுமதி வேண்டினால் இல்லப் பொறுப்பாளர் பாதிக்கப்பட்டவருக்கு தங்க அனுமதி கொடுக்கவேண்டும்.

(எ.கா) ஒரு பெண் குடும்ப வன்முறையின் காரணமாக வசிக்கும் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டால் அவருடைய குடும்ப வன்முறைப் புகாரை பதிவு செய்ய உதவி செய்து அப்பெண்ணுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்வர். மேலும் பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ உதவி கேட்டால் மருத்துவ உதவிகளைப் பெற ஏற்பாடு செய்வர்.

**இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்வது அவசியமா?**



இல்லை. புகார் அளிக்கும் போது வன்முறை சம்பவ அறிக்கை தயார் செய்து அதனை மேல் நடவடிக்கைக்கு அனுப்புவது பாதுகாப்பு அதிகாரியின் கடமையாகும்.

**ஒரு பெண் இரவு நேரத்திலோ, அல்லது உடனடியாக காவல் நிலையத்திற்கோ பாதுகாப்பு மையங்களுக்கோ செல்ல முடியாத போது வன்முறையை சந்தித்தால் உதவிபெறும் வழி?**

பாதிக்கப்பட்ட பெண் அல்லது அவர் சார்பாக எவரும் சேவை அமைப்பினருக்கு மின்அஞ்சல், தொலைபேசி மூலமாகவும் தெரிவிக்கலாம். சேவை அமைப்பினர் நேரடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு காவல் அதிகாரியுடன் சென்று குடும்பநிகழ்வு அறிக்கை பதிவு செய்வார். ஒரு பெண் குடும்ப வன்முறை குறித்த புகாரை பாதுகாப்பு அலுவலர், சேவை அமைப்பினர் நேரடியாக நீதிமன்ற நடுவரிடம் பதிவு செய்யலாம். மேலும் அப்பெண் கிரிமினல் சட்டப்படி காவல்துறையிடம் புகார் பதிவு செய்ய விரும்பினால் அது FIR ஆக பதிவு செய்யப்படும்.

**நீதிமன்ற உத்தரவை மீறுதல் (பிரிவு – 31)**



வன்முறை நிகழ்த்தியவர் பாதுகாப்பு உத்தரவை மீறினால் ஒருவருட சிறைக் காவல் அல்லது ரூ.20,000/- அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். வேறு எந்தத் தருணத்திலும் இச்சட்டத்தில் கீழ் கைது செய்ய முடியாது.

# பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு காணுதல்) சட்டம் – 2013

## அமர்வு 6

### விசாகா குழு பின்னணி



விசாகா குழுவின் முன்னோடி என்றால் அது பன்வாரி தேவி ஆவார். பன்வாரி தேவி ராஜஸ்தான் மாநிலத்தில், ஜெய்ப்பூரில் இருந்து 55 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பத்தேரி என்ற கிராமத்தில் வசித்து வந்தார். இவர் குஜ்ஜார் என்ற ஜாதியை சேர்ந்தவா். இவர் ஒரு சமூக சேவகி. அதனால் ராஜஸ்தான் மாநில அரசால் பெண்கள் மேம்பாட்டு திட்டத்தில் பணியமா்த்தப்பட்டவர்.

1992 ஆம் ஆண்டு குஜ்ஜாா் சாதியில் 9 வயது குழந்தைக்கு திருமணம் செய்து வைக்க முயற்சி நடப்பதை அறிந்த பன்வாரி அந்த கிராமத்திற்குச் சென்று அவர்களுக்கு தக்க ஆலோசனை கூறினாா். ஆனால் அவர்கள் கேட்பதாக இல்லை.

உயர் ஜாதியினரின் ஆதிக்க சக்தியை அறிந்த பன்வாரி ஒன்பது வயது பெண்ணுக்கு திருமணம் செய்கிறார்கள், அதை தடுப்பது என் பணி என போலீசுக்கு தகவல் தெரிவித்தாா். அங்கு வந்த போலீசிடம், கிராமத்தினர் இது சாதாரண விழா, திருமணம் எதுவும் இல்லை என நாடகம் நடத்தி அனுப்பிவிட்டனர்.

22 செப்டம்பர் 1992 அன்று அக்குழந்தையின் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து ஆண்கள் பன்வாரியை அடித்ததுடன், பன்வாரியை அவர் கணவர் முன்னிலையில் பாலியல் பலாத்காரம் செய்தனர். அப்போது அவருக்கு வயது 26, பன்வாரியும், அவரது கணவரும் இந்த பிரச்சனையை அப்படியே விட்டு விடக்கூடாது என முடிவு செய்து நீதிமன்றத்தை அணுகினா். இவ்வழக்கு நடந்த 1995 ஆம் வருடம்வரை ஐந்து நீதிபதிகள் மாற்றம் பெற்றுள்ளனா் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் குற்றவாளிகளை நீதிமன்றம் குற்றவாளிகள் இல்லை என்று கூறி விடுவித்தது.



அதன் பின், ஜெய்ப்பூர் மற்றும் டெல்லியை சார்ந்த அரசு சாரா அமைப்புகளின் சார்பில் சமூக ஆர்வலர்கள் மற்றும் மகளிர் குழுக்கள் விசாகா கூட்டு தளத்தின் கீழ் உச்சநீதிமன்றத்தில் ஒரு பொது நல மனு தாக்கல் செய்தனர். பணியிடங்களில் பெண்களை பாதுகாக்க வேண்டும் என்றும், பெண் பாதுகாப்புக்கு முதலாளி பொறுப்பேற்க வேண்டும் என்றும், குறிப்பாக பெண்களின் நிலை மற்றும் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும், அவர்கள் கோரினர். அதன்பிறகு ***விசாகா மற்றும் பலர் எதிர் ராஜஸ்தான் மாநிலம் (Vishaka –Vs- State of Rajsthan)*** *என்ற மேற்கண்ட வழக்கில் 13 ஆகஸ்ட் 1997* அன்று உச்சநீதிமன்றம் சில வழிமுறைகளை வகுத்தது. அதன்படி 1997 ஆம் ஆண்டு விசாகா அமைப்பு தாக்கல் செய்த வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய விசாகா வழிகாட்டுதல்கள் மற்றும் நீதிபதி வர்மா கமிட்டியின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு 22-04-2013 அன்று நடைமுறைக்கு வந்தது.



## இச்சட்டத்தின் நோக்கம்

எந்தப் பெண்ணும் வேலை செய்யும் எந்த இடத்திலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாகக் கூடாது. வேலை செய்யும் இடத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பையும், அவர்கள் பாதிக்கப்பட்டு புகார் கொடுத்தால் அதற்கான தீர்வு கிடைக்கவும், பெண்களுக்கு வேலைச் செய்யும் இடங்களில் நடக்கும் வன்முறைகளை தடுக்கவும் உருவாக்கப்பட்டதே இச்சட்டம்.

## பாலியல் வன்முறை என்பதன் வரையறைகள்



பாலியல் தன்மை கொண்ட வற்புறுத்தல்கள், பாலியல் சீண்டல்கள் அதாவது பெண் ஊழியரை தவறாக தொட்டுப்பேசுவது, அவரை பாலியலுக்கு அழைப்பது, பாலியல் ஆதாயங்களுக்காக வரவேற்கபடாத செயல்கள், பொருந்தாத வாக்குறுதிகள் அதாவது பணியிடங்களில் தேவையற்ற வெகுமதிகள், பணியில் சலுகை காட்டுதல். மேலும் பாலியல் ஆதாயத்திற்கு ஒத்துழைக்க மறுத்தால் மோசமாக நடத்துவது, எதிர்கால வேலைக்கு அச்சுறுத்துதல், அதிகாரத்தை வைத்து மிரட்டுவது, பாலியல் ரீதியான வார்த்தைகளை பேசுதல், ஆபாசமான படங்களை காட்டுதல் இவற்றின் மூலம் உடல் நலத்தையும், பாதுகாப்பையும் பாதிக்கக்கூடிய வகையில் அவமானமாக நடத்துதல் போன்றவை பாலியல் வன்முறைகள் என வரையறுக்கப்பட்டுள்ளன.

## பெண்களுக்கான பணியிடம்



பெண்களுக்கான பணியிடம் என்பது வேலை செய்யும் இடம், வேலைக்குச் செல்லும் நேரம், வேலையின் நிமித்தமாக பார்வையிடப்படும் இடம், ஒழுங்குப்படுத்தப்பட்ட, ஒழுங்குப்படுத்தப்படாத துறைகள், அரசு, தனியார் துறைகள், நிறுவனங்கள், அமைப்புகள், அலுவலக விருந்துகள், வளாகங்கள், பயிற்சிகள், வாடிக்கையாளர்கள் சந்திப்புகள், அலுவலக பணிக்கான பயணம் செய்யும் இடங்கள். அதாவது வேலை சம்பந்தமான எந்த இடமும் பணியிடமாகும்.

## பெண் பணியாளர்?

வேலை இடத்தில் வேலை செய்யும், பார்வையிடச் செல்லும் எல்லா பெண்களும், முழுநேரப்பணியாளர், பகுதிநேரப் பணியாளர், தினக்கூலி, சகப்பணியாளர், ஒப்பந்தப் பணியாளர், தேர்ந்தாய்வு பணியாளர், குறிப்பிட்ட வேலைக்காக வருவோர், சம்பளத்திற்கோ, தன்னார்வமாகவோ பயிற்சி பெறுபவர் மற்றும் தொழில் பழகுனர், பார்வையாளர் ஆகியோரும் உள்ளடங்குவர்.

## பாதிக்கப்பட்ட பெண்?

பாதிக்கப்பட்ட பெண் என்பவர் (எந்த வயதினராயினும்) வேலையில் இருந்தாலும் அல்லது வேலையில் இல்லாதவராக இருந்தாலும் பாலியல் துன்புறுத்தலுக்கு, தான் ஆளானதாகக் குற்றம் சாட்டும் பெண்ணே பாதிக்கப்பட்ட பெண் ஆவார்.

## பாலியல் துன்புறுத்தலின் பல்வேறு அம்சங்கள்



பாலியல் துன்புறுத்தல் என்பது நேரடியாகவோ அல்லது உட்பொருளாகவோ செய்யப்படும். பின்வரும் "விரும்பத்தகாத செயல்கள் அல்லது நடத்தைகளில்" ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை அதில் அடங்கும்.

- ✓ உடலை தொடுதல் மற்றும் எல்லை மீறுதல்
- ✓ பாலியல் உறவுக்கு அழைத்தல் அல்லது நிர்பந்தித்தல்
- ✓ பாலியல் ரீதியாக பேசுதல்
- ✓ ஆபாச படங்களை காட்டுதல்
- ✓ வேறு எந்த விரும்பத்தகாத நேரடி தொடுதல், பேசுதல் அல்லது சைகை ரீதியான பாலியல் நடத்தை
- ✓ தற்போதைய, எதிர்கால வேலை நிலை குறித்து மிரட்டுவது
- ✓ வேலையில் குறுக்கிடுவது
- ✓ அச்சுறுத்தும் - பகைமையான சூழலை உருவாக்குவது
- ✓ அவமானமாக நடத்துதல்
- ✓ ஆபாசப் பாடல்களை பாடுதல்
- ✓ ஆபாச ஜோக் அடித்தல்
- ✓ பாலின வேறுபாடு பார்த்தல்
- ✓ ஆபாசப் படங்களை வேலை செய்யும் இடங்களில் வைத்தல்
- ✓ வம்படியாக தொடுதல், தொல்லை கொடுத்தல், மறுப்பு அல்லது எதிர்ப்பு தெரிவித்தால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று மிரட்டுதல்.




**தடுப்பது யார் பொறுப்பு?**

அமைப்பின் உரிமையாளர், மத்திய, மாநில அரசு, ஊரக அமைப்பு, தலைமை அதிகாரிகள், தனியார் வேலைகளில் நிர்வாக மேற்பார்வையாளர், அலுவலகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர், வேலையின் பயனை பெறுபவர் ஆகியோர் பாலியல் வன்முறையற்ற பணியிடத்தை உருவாக்க வேண்டும்.

**இச்சட்டத்தின்படி இரண்டு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் ?**

1. உள் புகார் குழு (ICC)

2. உள்ளூர் புகார் குழு (LCC)

இக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகள். கிளை அலுவலகத்திலும் கமிட்டி அமைக்கப்பட வேண்டும். பாலியல் வன்முறை குறித்து கற்பிப்பதும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இக்குழுக்களின் பணிகளில் அடங்கும்.

## பணி அமர்த்துபவரின் – முதலாளியின் கடமை என்ன?

பாதுகாப்பான வேலையிடம், வேலையிடத்திற்கு வருவோர், போவோரிடமிருந்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இக்குற்றத்திற்கான தண்டணை விபரம், உள் விசாரணை கமிட்டி விபரம் குறித்து எல்லோருக்கும் தெரியும் விதத்தில் அறிவிப்பு பலகை வைத்தல், இச்சட்டம் குறித்து பயிற்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். உள் விசாரணை கமிட்டி விசாரணை நடத்த வசதிகளை ஏற்படுத்தி எதிர்மனுதாரர், சாட்சிகள், உள்விசாரணை கமிட்டியிடம் ஆஜராவதற்கு உதவி புரிய வேண்டும். உள்விசாரணை கமிட்டிக்கு வழக்கு சம்பந்தமான தகவல்களை கொடுத்தல், பாதிக்கப்பட்டவர் இந்திய தண்டனைச் சட்டப்படி புகார் செய்ய விரும்பினால் அவருக்கு உதவி புரிதல், பாலியல் வன்முறையை ஒழுக்கக் கேடான செயலாக கருதி துறை ரீதியான நடவடிக்கை எடுத்தல். உள் விசாரணை குழு குறிப்பிட்ட காலத்தில் அறிக்கையை சமர்ப்பிப்பதை கண்காணித்தல்.

## உள் புகார் குழு?

பணியிடத்தில் மூத்த பெண் பணியாளர் அதன் தலைவராகவும், பெண்கள் முன்னேற்த்தில் ஈடுபட்டவரோ அல்லது சமூக நலனில் அக்கறைக் கொண்டவரோ அல்லது சட்ட அறிவு உள்ள 2 பணியாளர்கள், பெண்களின் நலனில் அக்கறைக் கொண்ட அரசு சாரா அமைப்புகளிலிருந்தோ, சமூகங்களிலிருந்தோ தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அல்லது பாலியல் கொடுமைகளைப் பற்றிய விவரங்களை அறிந்த ஒருவர் இதில் இடம் பெறுவார்.

## உள்ளூர் புகார் குழு?

மாவட்ட ஆட்சியர் இக்குழுவினை அமைக்க வேண்டும். சமூக பணியில் பெண்கள் மற்றும் அவர்களின் நலனுக்காக புகழ்பெற்ற ஒருவர் தலைவராகவும், தாலுகா அல்லது வார்டு அல்லது நகராட்சி பணியாளர் ஒருவர், பெண்கள் நலனில் அக்கறைக் கொண்ட அரசு சாரா அமைப்புகளிலிருந்தோ, சங்கங்களிலிருந்தோ பரிந்துரைக்கப்பட்டு தேர்ந்து எடுக்கப்பட்ட பாலியல் துன்புறுத்தல் தொடர்பான பிரச்சனை அறிந்த ஒருவர், பரிந்துரைக்கப்பட்டவரில் குறைந்தபட்சம் ஒருவராவது சட்டம் அல்லது சட்ட அறிவு பெற்றவராக இருக்க வேண்டும். மேலும் பரிந்துரைக்கப்பட்டவர்களில் குறைந்தபட்சம் ஒரு பெண் பட்டியல் சமூகம் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த பெண்ணாக இருக்க வேண்டும். சமூக நலத்துறை அதிகாரி நிரந்தர உறுப்பினராகவும் இருந்து செயல்படுவார்.



## யார் புகார் கொடுக்கலாம்?

பாதிக்கப்பட்ட பெண். அவர் உடல் அல்லது மனநிலை சரியில்லா நிலையில் அல்லது இறப்பு அல்லது வேறு சில காரணங்களுக்காக புகார் செய்யப்பட முடியாத நிலையில், அவரது சட்டப்பூர்வ வாரிசு அல்லது பரிந்துரைக்கப்பட்ட நபர் (பாதுகாவலர், சிறப்பு கல்வியாளர், ஆலோசகர்) மூலம் புகார் செய்யலாம்.

## புகார் செய்யும் முறை

எழுத்துப்பூர்வமாக 3 மாதத்திற்குள் புகார் கொடுக்க வேண்டும். தொடர் நிகழ்வு என்றால் கடைசியாக நடந்த நிகழ்வு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள், காலதாமதத்தில் திருப்தி அடைந்தால் மேலும் 3 மாத காலதாமத்தை புகார் கமிட்டி நீட்டிக்கலாம். பாதிக்கப்பட்ட பெண் புகாரை எழுதிக்கொடுக்க முடியவில்லையென்றால் புகார் கமிட்டி உதவவேண்டும்.



## புகாரில் உள்ளடங்கி இருக்க வேண்டியது?

புகார்தாரர் பெயர், குற்றம் செய்தவர் பெயர், சம்பவ தேதி, இடம், நேரம், இருவருக்கும் இடையிலான வேலை தொடர்பான உறவு, சாட்சிகள் இருந்தால் விபரங்கள். புகாருடன் 5 நகல்கள் சமர்பிக்க வேண்டும்.

## புகாரைப் பெறும், புகார் குழுவின் நடவடிக்கை?




புகாரைப் பெற்ற 7 நாட்களுக்குள் விசாரணை தொடங்க வேண்டும். விசாரித்த 10 நாட்களுக்குள் புகார் குழு தனது முடிவுகள் குறித்த அறிக்கையை நிர்வாகத்திற்கு அனுப்ப வேண்டும். புகார் குழு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைப் பற்றி நிர்வாகத்திற்கு பரிந்துரை மட்டுமே செய்யும். நடவடிக்கை எடுப்பதோ அல்லது பரிந்துரையை மாற்றுவதோ நிர்வாகம் தீர்மானிக்கலாம். குழுவின் அறிக்கை பெற்ற 60 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விசாரிக்கும் போது குறைந்தது தலைவரை சேர்த்து 3 பேர் இருக்க வேண்டும். விசாரணையில் இயற்கை நீதி கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

### உடனடி சமாதானம்?

முறையான விசாரணை தொடங்குமுன், புகார் கொடுத்தவர் குற்றம் சாட்டப்பட்டவரோடு பேச்சுவார்த்தை மூலம் சமரசமாகப் போக விருப்பம் தெரிவித்தால் அதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அவ்வாறு தீர்வு கிடைக்குமென்றால் புகார் குழு, அத்தீர்வின் விவரங்களை விளக்கும் அறிக்கையை தயாரித்து நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். நிர்வாகம் புகார் குழுவின் பரிந்துரையை ஏற்று அதன்படி புகாரை முடிவுக்குக் கொண்டு வரும். அந்த அறிக்கையின் நகல்களை புகார் கொடுத்த பெண்ணிற்கும், குற்றம் சாட்டப்பட்ட ஆண் பணியாளருக்கும் அளிக்கப்படும்.

### இடைக்கால நடவடிக்கை?

பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக விசாரணை குழுவிடம் கோரிக்கை வைத்தால் குற்றசாட்டப்பட்டவர் அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணை மாற்று பணியிடத்திற்கு அல்லது பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 3 மாதம் விடுப்பு அல்லது வேறு சில நிவாரணங்களும் வழங்கலாம்.

### காலக்கோடு

புகார்

(சம்பவம் நடந்த அல்லது கடைசி சம்பவம் நடந்த 3மாதத்திற்குள்

எதிர்தரப்பினருக்கு அறிவிப்பு (புகாரை பெற்ற 7 நாட்களுக்குள்)

விசாரணை முடிவு (புகார் பெற்றதிலிருந்து 90 நாட்களுக்குள்)

அறிக்கை சமர்ப்பிப்பது (விசாரணை முடிந்த 10 நாட்களுக்குள்)

பரிந்துரையை நடைமுறைப்படுத்துவது(60 நாட்களுக்குள்)

மேல்முறையீடு (பரிந்துரைகள் செய்யப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள்)

# பாலியல் வன்கொடுமைகளிலிருந்து சிறாரைப் பாதுகாக்கும் சட்டம் 2012

## அமர்வு 7

பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் பெண் குழந்தைகளின்மீதான வன்முறைகளும் அடங்கும். அதனால் குழந்தைகளை பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தினை கற்றுக்கொள்வது மிகவும் அவசியமானது. இந்தியாவில் பாலியல் குற்றங்களில் இருந்து சிறாரைப் பாதுகாக்கும் சட்டம் 2012-ல் தான் பிரத்யேகமாக கொண்டு வரப்பட்டது. சிறார் மீதான வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்த காரணங்களால் 2019-ல் இச்சட்டத்தில் சிலப்பிரிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### சட்டத்தின் நோக்கம்

பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் குழந்தைகளை வைத்து ஆபாசப் படங்கள் எடுத்தல் போன்ற குற்றங்களிலிருந்து அனைத்து சிறாருக்கும் பாதுகாப்பு வழங்குதல், வயது வந்தோர் அல்லது வளர்ந்தோர் செய்யும் பாலியல் குற்றங்களிலிருந்து அனைத்து சிறாருக்கும் பாதுகாப்பு வழங்குதல். இச்சட்டத்தின் கீழ் ‘சிறார்’ என்பதன் பொருள் 18 வயதிற்குட்பட்ட எந்தவொரு நபரும் சிறார் என்றே கருதப்படுவர்.

### இச்சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள்

- ✓ ஊடுருவல் பாலியல் தாக்குதல்
- ✓ மிகமோசமான ஊடுருவல் பாலியல் தாக்குதல்
- ✓ பாலியல் தாக்குதல்
- ✓ மிகமோசமான பாலியல் தாக்குதல்
- ✓ பாலியல் தொந்தரவு
- ✓ குழந்தைகளை ஆபாச படங்களுக்காக பயன்படுத்துதல்



### ஊடுருவல் பாலியல் தாக்குதல்

**பிரிவு 3:** ஒரு நபர் கீழ்க்கண்ட எந்தச் செயலையும் செய்தாலோ அல்லது செய்ய வைத்தாலோ அது “ஊடுருவும் பாலியல் தாக்குதல்” செய்வதாகக் சொல்லப்படும்.

1. ஒருவர் தனது ஆணுறுப்பை, எந்த அளவிற்கும், சிறாரின் பிறப்புறுப்பு, வாய், சிறுநீர்க் குழாய் அல்லது ஆசன வாயில் ஊடுருவி அல்லது சிறாரை அவருடன் அல்லது வேறு எந்த நபருடனும் செய்ய வைக்கிறார் என்றால்,

2. ஒருவர் எந்த அளவிற்கும், எந்த ஒரு பொருளையும் அல்லது ஆண்குறி அல்லாத உடலின் ஒரு பகுதியையும், சிறாரின் பிறப்புறுப்பு, சிறுநீர்க் குழாய் அல்லது ஆசன வாயில் நுழைக்கிறார் அல்லது சிறாரை அவருடன் அல்லது வேறு எந்த நபருடனும் செய்ய வைக்கிறார் என்றால்,
3. ஒருவர் சிறாரின் உடலின் எந்தப் பகுதியையும் பயன்படுத்தி, பிறப்புறுப்பு, சிறுநீர்க் குழாய் அல்லது ஆசன வாயில் ஊடுருவலை ஏற்படுத்தும் அல்லது சிறாரை அவரோடு அல்லது வேறு எந்த நபரோடும் செய்ய வைக்கிறார் என்றால்,
4. ஒருவர் ஆண்குறி, பெண்குறி, ஆசன வாய், சிறுநீர்க் குழாயில் தனது வாயைப் பயன்படுத்துகிறார் அல்லது அவருக்கு அல்லது வேறு எந்த நபருக்கும் சிறாரை செய்ய வைக்கிறார் என்றால், அது "ஊடுருவும் பாலியல் தாக்குதல்" என்று சொல்லப்படும்.

**மிகமோசமான ஊடுருவல் பாலியல் தாக்குதல்**

**பிரிவு 5:** ஊடுருவும் பாலியல் தாக்குதலைச் செய்பவர் காவல்துறை அதிகாரியாகவோ அல்லது ஆயுதப்படைகள் அல்லது பாதுகாப்புப் படைகளின் உறுப்பினராகவோ அல்லது பொதுப்பணியாளராகவோ அல்லது நிர்வாகத்தின் அல்லது சிறைச்சாலையின் பணியாளராகவோ இருந்தாலும், காவல் அடைப்பகம், பாதுகாப்பு இல்லம், கண்காணிப்பு இல்லம், பிற காவல் நிலையம், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அல்லது ஒரு மருத்துவமனையின் நிர்வாகம் அல்லது பணியாளர்கள், அரசு, தனியார், கல்வி நிறுவனம், மத நிறுவனத்தின் நிர்வாகம் அல்லது பணியாளராகவோ இருந்து ஒரு சிறார் மீது ஊடுருவக்கூடிய பாலியல் வன்கொடுமை செய்தால் அல்லது அச்செயல்களைக் கூட்டமாக இணைந்து செய்தால் அல்லது அச்செயலை செய்வதற்குக் கொடிய ஆயுதங்கள், தீ, சூடான பொருள் அல்லது அரிக்கும் பொருளைப் பயன்படுத்தினால் அல்லது சிறாரின் பாலியல் உறுப்புகளில் காயம் அல்லது உடல் காயம் அல்லது கொடுங்காயத்தை ஏற்படுத்தியிருந்தால் அது மோசமான ஊடுருவல் பாலியல் தாக்குதல் ஆகும்.



**பாலியல் தாக்குதல் என்பதன் விளக்கம்**

**பிரிவு 7:** ஒருவர் பாலியல் நோக்கத்துடன் சிறாரின் பிறப்புறுப்பு, ஆண்குறி, ஆசனவாய் அல்லது மார்பகத்தைத் தொடுவது அல்லது சிறாரை பிறப்புறுப்பைத் தொட வைத்தல்.

- ✓ குற்றம் செய்பவர் அல்லது வேறு எந்த நபரின் உடலின் அத்தகைய பாகங்களைத் தொடுவதற்கு சிறாரை உட்படுத்துதல்.
- ✓ ஊடுருவலைத் தவிர உடல் ரீதியான தொடுதல் சம்பந்தப்பட்ட பாலியல் நோக்கம் கொண்ட வேறு எந்த செயலும், பாலியல் தாக்குதல் ஆகும்.

**சிறாருக்கு பாலியல் தொல்லை**

**பிரிவு 11:** ஒருவர் சிறாரை ஆபாச நோக்கங்களுக்காக கவர்ந்திழுத்தால் அல்லது அதற்காக வெகுமதிகளை கொடுத்தால், சிறார்க்கு பாலியல் தொல்லை கொடுத்தல் என்பதாகும். அதாவது, பாலியல் நோக்கத்துடன் ஒருவர் செய்யும் செயல்கள்,



- சிறுவரால் கேட்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் சொல்லப்படும் எந்த வார்த்தையையும், ஒலியும், சிறுவரால் பார்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் எந்த சைகையும், உடலின் ஒரு பகுதியை அல்லது ஒரு பொருளை வெளிக்காட்டுதல்.
- ஒருவர் சிறார் தனது உடலையோ அல்லது தனது உடலின் எந்தப்பகுதியையோ அந்த நபரோ அல்லது வேறு எந்த நபருமோ பார்க்க வேண்டும் என்பதற்காக காட்டச் சொல்லுதல்.
- ஆபாச நோக்கங்களுக்காக சிறாருக்கு எந்த வடிவத்திலும் அல்லது ஊடகத்திலும் எந்தவொரு பொருளையும் காட்டுதல்.



- நேரடியாகவோ அல்லது மின்னணு, டிஜிட்டல் அல்லது வேறு எந்த வழியிலோ சிறாரைத் திரும்பத் திரும்ப அல்லது தொடர்ச்சியாகப் பின்தொடர்ந்தால் அல்லது பார்த்தால் அல்லது தொடர்பு கொள்ளுதல்.
- சிறாரின் உடலில் எந்தப் பகுதியையும் அல்லது பாலியல் செயலில் சிறார் ஈடுபடுவதையும், எந்த ஒரு ஊடகத்திலும், எலக்ட்ரானிக், படம் அல்லது டிஜிட்டல் அல்லது வேறு எந்த முறையிலும், உண்மையான அல்லது புனையப்பட்ட சித்தரிப்பைப் பயன்படுத்தப் போவதாக மிரட்டுதல்.

**சிறாரை ஆபாச படங்களுக்காக பயன்படுத்துதல்**

**பிரிவு 13:** ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்துதல், அதாவது தொலைக்காட்சி சேனல்களில் காட்டப்படும் நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், இணையம் மற்றும் மின்னணு அச்சு வடிவத்தில் வெளியிடப்படுதல் மூலம் சிறாரின் பாலியல் உறுப்புகள் குறித்து காட்டுதல்.



- சிறாரை உண்மையாக அல்லது உருவகப்படுத்தப்பட்ட பாலியல் செயல்களில் பயன்படுத்துதல் (ஊடுருவலுடன் அல்லது இல்லாமல்) சிறாரை மோசமாகவும், ஆபாசமாகவும் காட்டுதல், ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்துதல் போன்றவையாகும்.

- கடுமையான குற்றங்களான இச்சட்டப் பிரிவுகள் 3,5,7 மற்றும் 9-ன் கீழ் ஒருவர் குற்றம் சாட்டப்படும் போது அவரே தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும்.

- இச்சட்டப்படி குற்றம் செய்யத் தூண்டுவதும் அக்குற்றம் செய்வதற்கு சமமாக கருதப்படும் **(பிரிவு 16)** மேலும் பாலியல் நோக்கங்களுக்காக சிறாரைக் கடத்துதல் என்பது இச்சட்டப்படி குற்றம் செய்ய தூண்டுவதாகச் கருதப்படும்.

**புகார் கொடுப்பதற்கான நடைமுறைகள் (பிரிவு 19)**

- குற்றத்தைப் பற்றி சிறார் காவல் பிரிவு (Special Juvenile Police Unit – SJPU) அல்லது உள்ளுர் காவல் துறையிடம் புகாரளித்தல்.
- சிறாருக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்பட்டால், சிறார் காவல்பிரிவு (SJPU) உள்ளுர் காவல்துறை 24 மணி நேரத்திற்குள் சிறார் நலக்குழுவிடம் (Child Welfare Committee- CWC) மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் இந்தத் தகவலை தெரிவிக்க வேண்டும்.
- ஒரு சிறார் புகாரளிக்கத் தவறினால் தண்டிக்கத்தக்கதல்ல.
- நல்லெண்ணத்தில் தகவல் கொடுத்தவருக்கு எதிராக சிவில் அல்லது கிரிமினல் வழக்குத் தொடுக்க முடியாது.



- சிறப்பு நீதிமன்றம் அனுமதி தந்தாலன்றி, சிறாரின் அடையாளத்தை ஊடகங்கள் வெளியிடக் கூடாது. அடையாளம், பெயர், முகவரி, புகைப்படம், குடும்ப விவரங்கள், பள்ளி, சுற்றுப்புற அல்லது சிறாரின் அடையாளத்தை வெளிப்படுத்த வழிவகுக்கும் வேறு எந்த விவரங்களும் இதில் அடங்கும்.
- பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான உடனடித் தேவையை காவல்துறை தீர்மானிக்க வேண்டும்.
- அவசர மருத்துவ சேவைக்கு காவல்துறை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- தடயவியல் மாதிரிகள் விரைவில் தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- கீழ்க்காணும் காரணங்களுக்காக, அறிக்கையைப் பெற்ற 24 மணி நேரத்திற்குள் சிறாரை சிறார் நலக்குழு (CWC) முன் முன்னிறுத்த வேண்டும்.

➢ சிறாா் பராமரிப்பு நிறுவனத்தில் சிறாா் வசித்து வருகிறாா் மற்றும் பெற்றோா் ஆதரவு அவருக்கு இல்லாமல் உள்ளது என்று தெரியவந்தால், சிறாருக்கு வீடு மற்றும் பெற்றோா் ஆதரவு இல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டால் சிறாா் பராமரிப்புக்கான மாற்று ஏற்பாடுகள் தேவையா என்பதைத் தீா்மானிக்க வேண்டியது சிறாா் நலக்குழுவின் (CWC) பொறுப்பாகும்.

**சிறாரின் வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கான நடைமுறைகள் (பிரிவு 24)**



- சிறாருக்கு உகந்த நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.
- சிறாரின் இல்லத்தில் பதிவு செய்தல் வேண்டும்.
- சாா்பு ஆய்வாளா் பொறுப்பிற்குக் கீழ் இல்லாத அதிகாாி பதிவு செய்தல் வேண்டும்.
- போலீஸ் அதிகாாிகள் சீருடையில் இருக்கக் கூடாது.
- குற்றம் சாட்டப்பட்டவருடன் சிறாா் தொடா்பு கொள்ளக் கூடாது.
- சிறாரைக் காவல் நிலையத்தில் இரவில் தங்க வைக்கக் கூடாது.
- தேவைக்கு ஏற்ப மொழி பெயா்ப்பாளா், விளக்கமளிப்பவா் சிறப்பு கல்வியாளாின் உதவியை நாடலாம்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் அத்தகைய நபா்களின் பதிவேட்டை மாவட்ட சிறாா் பாதுகாப்பு (District Child Protection Unit – DCPU) பராமாிக்க வேண்டும்.
- அவா்களுக்கான ஊதியத்தை சிறாா் நீதிமன்ற நிதியிலிருந்து (Juvenile justice Fund) மாநில அரசு செலுத்த வேண்டும்.
- சாத்தியமான இடங்களில் ஆடியோ- வீடியோ எலக்ட்ரானிக் மூலம் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும்.

**கீழ்க்காணும் தகவல்கள் சிறார் சம்பந்தப்பட்ட நபருக்கு காவல்துறையால் வழங்கப்பட வேண்டும்:**

- ♣ சந்தேகத்திற்குரிய குற்றவாளிக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தல்.



- ♣ சிறாருக்குத் தேவையான கலந்து கொள்ள வேண்டிய நீதிமன்ற நடவடிக்கைகளின் அட்டவணை.
- ♣ குற்றவாளியின் ஜாமீன், விடுதலை அல்லது தடுப்புக்காவல் நிலைபற்றிய தகவல்கள்.
- ♣ விசாரணைக்குப் பிறகு வழங்கப்படும் தீர்ப்பு பற்றிய தகவல்.
- ♣ குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட தண்டனை.

**சிறாருக்கு மருத்துவ பரிசோதனையின் போது கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் ( பிரிவ 27)**

→ குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 பிரிவு 164 அ–ன் படி மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

→ பெண் சிறார் என்றால், பெண் மருத்துவரால் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட வேண்டும்.

→ பெற்றோர் பாதுகாவலர்கள் முன்னிலையில் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

→ சட்டம் அல்லது நீதிமன்ற நடுவரின் கோரிக்கை அல்லது ஆவணங்கள் தேவையில்லை.

→ தடயவியல் சான்றுகள் சட்டத்தின் பிரிவு 27 இன்படி சேகரிக்கப்பட வேண்டும்.





## போக்சோ சட்டத்தின் குற்றங்களும் தண்டனைகளும்

| | சிறார்களுக்கெதிரான பாலியல் குற்றங்கள் | குறைந்தபட்ச தண்டனை | அதிகபட்ச தண்டனை | அபராதம் |
|---|---|---|---|---|
| 1. | ஊடுருவல் பாலியல் தாக்குதல் | 10 ஆண்டுகள் சிறை | ஆயுள்சிறை | ஆம் |
| 2. | தீவிரமான ஊடுருவல் பாலியல் தாக்குதல | 20 ஆண்டுகள் கடுமையான சிறை | ஆயுள் சிறை(அ) மரண தண்டனை | ஆம் |
| 3. | மிகதீவிரமான தாக்குதல் | 5 ஆண்டுகள் சிறை | 7 ஆண்டுகள் சிறை | ஆம் |
| 4. | பாலியல் தாக்குதல் | 3 ஆண்டுகள் சிறை | 5 ஆண்டுகள் சிறை | ஆம் |
| 5. | பாலியல் துன்புறுத்தல் | | 3 ஆண்டுகள் சிறை | ஆம் |
| 6. | ஆபாச நோக்கங்களுக்காக சிறாரைப் பயன்படுத்துதல் | 5 ஆண்டுகள் சிறை | அடுத்தடுத்து குற்றம் இழைத்தால் 7 ஆண்டுகள் சிறை | ஆம் |
| 7. | ஆபாச செயல்களுடன் 3,5,7 மற்றும் 9 சட்டப்பிரிவுகளில் குற்றம் செய்யப்பட்டிருந்தால் | | அக்குற்றத்திற்கான தண்டனையுடன் ஆபாச செயல்களுக்கான தண்டனையும் வழங்கப்படும் | |
| 8. | வணிக நோக்கங்களுக்காக சிறார்களை உட்படுத்தி பாலியல் தொழிலுக்கான பொருட்களை சேமித்தல் | 1 முதல் தடவை குற்றம் செய்யும் நபருக்கு 3 ஆண்டுகள் சிறை, 2 தடவை குற்றம் செய்யும் நபருக்கு 5 ஆண்டுகள் சிறை | 5ஆண்டுகள் சிறை முதல் 7ஆண்டுகள் சிறை | ஆம் |
| 9. | குழந்தை சம்பந்தமான ஆபாச பொருட்களை சேமித்தல் | | | ரூ.5000 குறையாமல் மீண்டும் அதே குற்றம் இழைத்தால் ரூ.10,000 |
| 10. | குழந்தை சம்பந்தமான ஆபாச பொருட்களை சேமித்து விநியோக்கின்ற நோக்கத்தில் வைத்திருந்தால் | 3 ஆண்டுகள் சிறை | | ஆம் |
| 11. | குழந்தையைச் சம்பந்தப்படுத்தி ஆபாசமாக சித்தரித்து பொருட்களை வைத்திருந்தால் | முதல்முறை குற்றம் இழைத்தால் 5 ஆண்டுகள் | இரண்டாம் முறை அதே குற்றம் இழைத்தால் 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் | ஆம் |
| 12. | ஒரு குழந்தையிடம் பாலியல் குற்றத்தைச் செய்ய முயற்சி செய்தல் | | குற்றம் செய்ததற்கான தண்டனையில் பாதியாக வழங்கப்படும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | ஊடகம், ஸ்டுடியோ மற்றும் நிழற்பட வசதியுள்ள இடங்களில் நடக்கும் குற்றங்களை புகார் கொடுக்கத் தவறினால் தண்டனை | | 6 மாதம் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் | ஆம் |
| 14. | சிறார் காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல்துறையினர் ஒரு குற்றத்தை வழக்காக பதிவு செய்யத் தவறினால் தண்டனை | | 6 மாதம் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் | ஆம் |
| 15. | ஒரு நிறுவனம் ஒரு நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள ஒருவர் அல்லது அந்நிறுனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒருவர் செய்த குற்றத்தைப் புகார் செய்யத் தவறினால் தண்டனை | | 1ஆண்டு சிறை மற்றும் அபராதம் அல்லது இரண்டும் | ஆம் |
| 16. | சிறாரைப் பயன்படுத்தி பொய்ப் புகார் அளித்தால் அதற்கான தண்டனை | | 1 ஆண்டு சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் | ஆம் |
| 17. | ஒரு சிறாரின் அடையாளத்தை ஊடகத்தில் வெளியிட்டால் அதற்கான தண்டனை | 6 மாதம் சிறை | 1 ஆண்டுவரை சிறை | ஆம் |

## சிறப்பு நீதிமன்றங்களின் நடைமுறைகளும், வழக்கை முடிப்பதற்கான காலவரம்பும் (பிரிவு 33 மற்றும் பிரிவு 35)

- ✓ ஒவ்வொரு சிறப்பு நீதிமன்றத்திற்கும் ஒரு சிறப்பு அரசு வழக்கறிஞரை மாநில அரசு நியமிக்க வேண்டும்
- ✓ சிறப்பு நீதிமன்றம் மூலம் சிறாரிடம் குறுக்கு விசாரணை.
- ✓ விசாரணையின் போது சிறாருக்கு அடிக்கடி இடைவேளை அவசியம்.
- ✓ சிறாரின் பெற்றோர், காப்பாளர், நண்பர், உறவினர் அருகாமையில் இருத்தல் அவசியம்.
- ✓ சாட்சியாக சிறாரை மீண்டும் மீண்டும் அழைக்கக் கூடாது
- ✓ சிறாரின் அடையாளம் வெளியிடப்படக்கூடாது.
- ✓ முரட்டுத்தனமான கேள்விகள் அல்லது சிறாரின் பெயருக்கு கலங்கம் உண்டாகும் கேள்விகளைக் கேட்கக்கூடாது.
- ✓ வழக்கு விசாரணையின் போது "உள்விசாரணை' நடத்தப்பட வேண்டும்.
- ✓ சாட்சியமளிக்கும் நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவரை சிறார் பார்க்கும்படி இருக்கக் கூடாது
- ✓ சிறப்பு நீதிமன்றம் மொழி பெயர்ப்பாளர் ,விளக்கமளிப்பவர், சிறப்பு கல்வியாளர் உதவியைப் பெறலாம்.
- ✓ 30 நாட்களுக்குள் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

- ✓ ஒரு வருடத்திற்குள் சிறப்பு நீதிமன்றத்தால் விசாரணையை முடித்திருக்க வேண்டும்.
- ✓ சிறப்பு நீதிமன்றம் சில பொருத்தமான வழக்குகளில் இழப்பீடு வழங்கலாம்.

**இழப்பீடு வழங்கும் போது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியவை**

- ○ வன்கொடுமையின் வகை, அளவு மற்றும் தீவிரத்தன்மை
- ○ மருத்துவ சிகிச்சைக்கான செலவு.
- ○ கல்வி வாய்ப்பு இழப்பு, வேலை இழப்பு
- ○ குற்றவாளியுடன் சிறாரின் உறவு
- ○ வன்கொடுமை ஒருமுறை தனித்து மட்டும் நடந்துள்ளதா அல்லது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நடந்துள்ளதா?
- ○ சிறார் கர்ப்பமாகி இருக்கிறாரா?
- ○ சிறாருக்கு பால்வினை நோய் தொற்று ஏற்பட்டள்ளதா?
- ○ சிறாருக்கு எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா?
- ○ சிறாருக்கு ஊனம் ஏற்பட்டுள்ளதா?
- ○ சிறாரின் நிதிநிலை என்ன?

**இந்த காரணங்களை அறிந்து சிறப்பு நீதிமன்றம் இழப்பீடு வழங்க உத்தரவிடலாம். உத்தரவு கிடைத்த 30 நாட்களுக்குள் மாநில அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.**



# பிற்சேர்க்கை

## ஒரு புகாரை எழுதும்போது கவனத்தில் இருக்கவேண்டியவைகள்...

1. அனுப்புநர் முகவரி முழுமையாக இருக்கவேண்டும். தொலைபேசி தொடர்பு எண்களையும் கொடுப்பது நல்லது.
2. சம்பவ தேதி, நேரம், இடம் குறிப்பிடவேண்டும்.
3. சம்பவ நேரத்தில் புகார்தாரரோடு உடன் சென்றவர்கள் அல்லது சம்பவத்தை நேரில் பார்த்தவர்களைப் பற்றிக் குறிப்பிடவேண்டும்.
4. எதிரிகளின் பெயர், ஊர் குறிப்பிடவேண்டும். பெயர் தெரியவில்லை என்றால் அவர்களுடைய அடையாளங்களைச் சொல்லவேண்டும்.
5. குற்ற நிகழ்வுக்கான காரணம் என்ன என்பதை சொல்லவேண்டும்.
6. குற்ற நிகழ்வின்போது எப்படி குற்றச் சம்பவம் நடந்தது என்பதை கூறவேண்டும்.
7. குற்ற நிகழ்வின்போது எதிரிகள் பேசிய வார்த்தைகள் குறிப்பிட வேண்டும்.
8. எதிரிகள் என்னென்ன ஆயுதங்களைப் பயன்படுத்தினர்? அந்த ஆயுதங்களால் எங்கெங்கு என்ன மாதிரியான காயங்கள் ஏற்பட்டது என்பதை குறிப்பிடவேண்டும்.
9. குற்ற நிகழ்வின்போது உடமைகளுக்கு, சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பையும், அதன் மதிப்பையும் விளக்க வேண்டும்.
10. புகார் தேதியும் புகார்தாரர் கையொப்பமும் இருக்கவேண்டும்.
11. காவல்நிலையத்தில் கொடுக்கப்படும் புகார் கையால் எழுதப்பட்டதாக இருக்கவேண்டும். மேல் அதிகாரிகளுக்கு கொடுக்கப்படும் புகார் அல்லது மேல்முறையீடு தட்டச்சு செய்திருப்பது நல்லது.
12. புகாரை முடிக்கும் போது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை வைக்க வேண்டும்.
13. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு காலதாமதமானால் மனு ரசீது ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.
14. புகாரை வாங்க மறுத்தாலோ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுத்தாலோ காவல்துறையின் மேல் அதிகாரிகளிடம் நேராகவோ அல்லது தபால் மூலமாகவோ மேல்முறையீடு செய்யலாம்.

# புகார் மாதிரி படிவம்

அனுப்புநர்

XXXXXXX (வயது)
க/பெ XXXXXXX,
முழு முகவரி: XXXXXXX,
தொலைபேசி எண்: XXXXXXX.

பெறுநர்

உயர்திரு காவல்ஆய்வாளர் அவர்கள்.
அனைத்து மகளிர் காவல்நிலையம்.
ஒஒஒஒஒ. மதுரை மாவட்டம்.

மதிப்பிற்குரிய அம்மா,

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். நானும் மதுரையை சேர்ந்த XXXXX என்பவரும் காதலித்து கடந்த XXXXX தேதியில் திருமணம் செய்துக்கொண்டோம். நாங்கள் இருவரும் XXXXX, XXXXX சமூகத்தை சார்ந்தவர்கள். எங்களுக்கு 3 வயதில் XXXXX என்ற ஒரு பெண் குழந்தை உள்ளது. திருமணம் ஆன நாளிலிருந்து நாங்கள் கூட்டுக்குடும்பமாக என் கணவர் வீட்டில் வசித்து வந்தோம். திருமணத்திற்குப் பிறகு எங்களுக்கு குழந்தை பிறந்தவுடன் என்பெற்றோர் எங்களோடு சமாதானமாகிவிட்டனர். என் மாமன் XXXXX மாமியார் XXXXX ஆகியோருக்கு நாங்கள் காதலித்து திருமணம் செய்துக்கொண்டது ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை. நாங்கள் பார்த்த பிள்ளையை கல்யாணம் செய்திருந்தால் நகை நட்டு, பணம், பண்டம் பாத்திரம், மோட்டார் பைக் எல்லாம் என் மகனுக்கு கிடைத்திருக்கும், என்று என்மாமியார் அடிக்கடி புலம்புவார். எனது கணவரும், உனக்கு முறைப்படி கல்யாணம் செய்திருந்தால் உன் பெற்றோருக்கு எவ்வளவு செலவாகியிருக்கும் அந்த பணத்தை இப்ப வாங்கிக்கொடு, நான் பிசினஸ்சை மேம்படுத்த வேண்டும், எனக்கு உடனடியாக 3 லட்சம் பணம் வேண்டும் என்று அடிக்கடி சண்டைபோட ஆரம்பித்தார். என் கணவர் கேட்ட பணத்தை உடனடியாக கொடுக்கும் நிலையில் என் பெற்றோர் இல்லை. பிச்சைக்காரியை கட்டிக்கிட்டு வந்துட்டான் என்று என் மாமனாரும் மாமியாரும் திட்டிக்கொண்டே இருந்தனர். இந்த நியைில் XXXX தேதியில் மதியம் சுமார் 1.30 மணியளவில் எனது அலைபேசியில் என் அம்மாவிடம் எனது கணவர் மாமன் மாமியார் 3 லட்சம் பணம் கேட்டு கொடுமைப்படுத்துவது சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது, வெளியில் சென்றிருந்த எனது கணவர் வீட்டுக்கு வந்து பணம் எங்கடி என்று கேட்டு எனது அலைபேசியை பிடுங்கி எறிந்துவிட்டு, அருகில் கிடந்த மர ஸ்டூலை எடுத்து என் தலையில் அடித்தார். நான் தடுத்தும் என் இடது தலையில் பட்டு காயம் ஏற்பட்டு இரத்தம் கொட்டியது. இடது கையால் தடுத்ததால் இடது கை சிறுவிரல் ஒடிந்து தொங்கியது. இதையெல்லாம் என் மாமன் மாமியார் வேடிக்கைப் பார்த்துக்கொண்டே அவளைக் கொல்லுடா, அவ இருந்தாலும் ஒன்னுதான் இல்லாட்டினாலும் ஒன்னுதான் என்று என் கணவரை தூண்டிவிட்டனர். சத்தம் கேட்டு பக்கத்து வீட்டிலிருந்து ஓடிவந்த எனக்கு நன்கு பழக்கமான XXXXX அக்கா எனக்கு ஆறுதல் சொல்ல, உடனே இந்த சம்பவத்தைப் பார்த்து அழுதுகொண்டிருந்த என் மகளை தூக்கிக்கொண்டு, உடைந்துபோன என் அலைபேசியையும் எடுத்துக்கொண்டு நானும் அந்த அக்காவும் ஒரு ஆட்டோ பிடித்து அருகில் இருந்த மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றேன். நடந்த விபரத்தை டாக்டரிடம் சொன்னேன். எனது தலையில் ஏற்பட்ட காயத்திற்கு ஒரு தையல் போட்டனர். ஒடிந்த கைவிரலுக்கு கட்டுப்போட்டனர். எனக்கு உதவி செய்த அக்காவின் அலைபேசி வழியாக எனது பெற்றோருக்கு தகவல் சொல்ல, அவர்களும் மருத்துவமனைக்கு வந்துவிட்டனர். இதற்கிடையில் என் அப்பா காவல்துறையின் அவசர உதவி எண் 100–க்கும் புகார் கொடுத்துள்ளதாகவும் சொன்னார். வெளிநோயாளியாக சிகிச்சை பெறலாம் என்று டாக்டர் அறிவுறுத்தியதால் நேரடியாக காவல்நிலையம் வந்து இந்த புகாரைக் கொடுக்கிறேன். ஆகவே என்னிடம் பணம் கேட்டு கொடுமைப்படுத்தி அடித்து காயப்படுத்திய எனது கணவர் எனது மாமன் மாமியார்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இடம் : மதுரை
தேதி: XXXXX

இப்படிக்கு.
(XXXXX)

# பெண்களுக்கான சில முக்கியமான நம்பிக்கை தரும் தீர்ப்புகள்

## ரூபாலி –எதிர்– உத்தர பிரதேச மாநிலம்

மனைவியிடம் அவருடைய கணவர் இரண்டு லட்சமும் ஒரு காரும் வரதட்சணையாக தர வேண்டும் என்று அவரை அடித்து துன்புறுத்திய நிலையில் மனைவி அவருடைய தந்தை இல்லத்திற்கு சென்று விட்டார். அவர் மீண்டும் தன்னுடைய கணவரின் வீட்டிற்கு வந்தபோது, கணவர் வேறொரு பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாக கூறி தன்னுடைய வீட்டில் தங்க வைத்திருந்தார். அதைப் பற்றி மனைவி கேட்ட பொழுது அவரை ஒரு தனி அறையில் தனிமைப்படுத்தி அடித்து துன்புறுத்தி அவரை மனதளவிலும் உடலளவிலும் காயப்படுத்தியுள்ளார். உத்தர பிரதேச உயர்நீதிமன்றத்தில் மனைவி தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மனைவி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுக்குச் சென்றார். உச்சநீதிமன்ற மேல்முறையீட்டில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498 A படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்றும், இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தன் கணவரிடம் இருந்தும் கணவருடைய குடும்ப உறுப்பினர்களிடமிருந்தும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## சமீர் வித்யாசாகர் பரத்வாஜ் –எதிர்– நந்திதா சமீர் பரத்வாஜ்

இந்த வழக்கில் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 19–ன்படி வசிப்பதற்கான கட்டளை: குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தாங்கள் வசித்து வந்த வீட்டில் வசிக்கும் உரிமை உள்ளது. மேலும் அந்த வீட்டில் கணவர் அதாவது வன்முறைக்கு காரணமாக இருப்பவர்கள் வசிப்பதை இந்தச் சட்டம் தடை செய்கிறது. அல்லது எதிர்மனுதாரர்/கணவர் பிரிவு 19 (ஊ)–ன் படி "பாதிக்கப்பட்ட பெண் அனுபவித்து வந்த அதே வசதியுடன் வசிப்பதற்கு மாற்று வசதியுடன் கூடிய குடியிருப்பு இடத்தை ஏற்படுத்தி தருதல் அல்லது வேறு சில சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பெண் குடியிருக்கும், வீட்டிற்குரிய வாடகையை அளிக்க உத்தரவிடலாம்" என்று உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## V.அனுஷா –எதிர்– B. கிருஷ்ணன்

குடும்பத்தில் கணவரால் வன்முறை இழைக்கப்படும் சூழ்நிலையில் கணவரை அவர் வசிக்கும் வீட்டிலிருந்து வெளியே அனுப்ப கூடுதல் வழக்கு தொடுக்கலாம். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வன்முறையை இழைக்கும் கணவன் அவர்கள் வசிக்கும் வீட்டை விட்டு வெளியே அனுப்பப்படுவதால் மனைவி மற்றும் அவருடைய குழந்தைகளின் பாதுகாப்புக்கு உறுதி கிடைக்கும் பட்சத்தில், அவருடைய கணவரை அவர்கள் வசிக்கும் வீட்டிலிருந்து வெளியே அனுப்ப நீதிமன்றம் உத்தரவு இடலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## K. பாண்டியன் –எதிர்– A. சாவித்திரி

கணவனிடமிருந்து மனைவிக்கு ஜீவனாம்சம் மொத்தமாக கொடுக்கப்பட்டிருந்தால்கூட, சில சூழ்நிலை மாற்றத்தால் மனைவி, மீண்டும் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் கேட்கலாம்.

## Mrs. விஜயா மானேபர் –எதிர்– காசிவல் ராஜ்மீம் ஸ்வாமி & தியாகிரி

பெற்றோர்கள் தங்களைப் பராமரித்துக் கொள்ள இயலாதபோது, அவர்கள் தமது மகன்கள் மற்றும் மகள்களிடம் இருந்து ஜீவனாம்சம் கேட்கலாம்.

## ராசாத்தி –எதிர்– கணேசன்

கணவன் வேறொரு பெண்ணுடன் வாழ்ந்து கொண்டிருந்த காரணத்தினால், மனைவி அவனுடன் வாழ மறுத்து, கணவரிடமிருந்து ஜீவனாம்சம் கேட்கலாம்.

## ஹேமா ரவால் ஷர்மா –எதிர்– பிரசாந்த் ஷர்மா

மனைவி கணவனுடன் வசித்து வந்தார். மனைவி மருத்துவராக இருந்து சம்பாதிக்கிறாள் என்று கூறி, அவளுக்குக் கணவன் ஜீவனாம்சம் அளிப்பதற்கும் உறைவிடம் அளிப்பதற்கும் மறுக்கக்கூடாது. பாதிக்கப்பட்ட மனைவி, கணவனுடன், கணவனது வீட்டில் வசிப்பதற்கும் அவனிடம் மாதம் ரூ. 15,000 ஜீவனாம்சம் பெறுவதற்கும் உரிமையுடையவளாவள்.

## இனாபி சிங் மைபாம் –எதிர்– குயின்டிரம் நிங்கோல் மைபாம் ஓங்பி ஓமிலா

தாயின் பாதுகாப்பில் உள்ள குழந்தையை பார்க்கும் உரிமை – குழந்தை தனது பாதுகாப்பில் இருப்பதற்குத் தாய் மனு செய்யாதிருக்கும் நிலையில், அந்தக் குழந்தையை வந்து பார்ப்பதற்கு, அந்த குழந்தையின் தந்தை மனுச் செய்தால் அது ஏற்கக்கூடிய ஒன்றாகும். அக்குழந்தை முன்னதாக தாயின் பாதுகாப்பில் இருந்திட்டபோதிலும், தாய் அந்தக் குழந்தையை தனது பாதுகாப்பில் வைத்திருப்பதற்கு மனு தாக்கல் செய்யவில்லை. இத்தகைய சூழ்நிலையில், அந்தக் குழந்தையை, அக்குழந்தையின் தந்தை பார்க்கும் உரிமையைக் தடை செய்யக்கூடாது. அப்படி தடை செய்தால், அது குடும்ப வன்முறை சட்டத்தின் நோக்கத்தை குறைபாடுடையதாக்கிவிடும்.

## பீபின் –எதிர்– மீரா

விவாகரத்து வழக்கில் கணவனும் மனைவியும் ஒன்றிணைந்து தாக்கல் செய்த மனுவில், மனைவி பணம் எதுவும் கேட்பதில்லை என்றும் நகை அல்லது ஜீவனாம்சம் கேட்பதில்லை என்றும் எழுதி கொடுத்து இருந்தாலும், மனைவி மீண்டும் இழப்பீடு கேட்பதற்கு தடையாக அது இருக்காது. மனைவியின் சட்டப்படியான உரிமைகளை கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட உடன்படிக்கை பொது கொள்கைக்கு எதிரானதாகும் என்றும் மனைவியின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

## பிராபகரன் S.V –எதிர்– கேரளா மாநிலம்

கூட்டுக் குடும்பத்தில் பாதிக்கப்பட்ட பெண் அவளது கணவருக்கு பங்குள்ள வீட்டில் உரிமை கோரலாம்.

## அகெல்லா லலிதா –எதிர்– கொண்டா ஹனுமந்த ராவ்

*குழந்தையின் குடும்பப்பெயரை தாய் தீர்மானிக்கிறார்:* குழந்தையின் இயற்கைப் பாதுகாவலராக இருக்கும் ஒரு பெண்ணுக்கு அக்குழந்தையின் குடும்பப் பெயரைத் தேர்ந்தெடுக்க உரிமை உண்டு என்றும், அவள் முதல் கணவர் இறந்த பிறகும், அக்குழந்தையைத் தனது புதிய குடும்பத்தில் சேர்த்துக் கொள்வதையும், குடும்பப் பெயரைத் தேர்ந்தெடுப்பதையும் தடுக்க முடியாது என்று வரலாற்றுமிக்க தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கியது. கூடுதலாக, முதல் கணவரின் குழந்தையை தத்தெடுப்பதற்கும் தாய் அனுமதிக்கப்படுகிறார். குழந்தையின் குடும்பப் பெயரைத் தீர்மானிக்கும் உரிமை தாய்க்கு மட்டுமே உள்ளது. மேலும் குழந்தையின் இயற்கைப் பாதுகாவலராக தாய் இருப்பார்" என்று நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி மற்றும் கிருஷ்ணா முராரி அமர்வு கூறியது.

## ஜார்கண்ட் மாநிலம் –எதிர்– சைலேந்திர குமார் ராய்

*இரண்டு விரல் சோதனையை தடை செய்தல்:* 2022 அக்டோபரில் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளில் "இரண்டு விரல் சோதனை" பயன்படுத்துவதற்கு இந்திய உச்சநீதிமன்றம் மீண்டும் ஆட்சேபனைகளை எழுப்பியது. பரிசோதனையை நடத்துவது கண்டறியப்பட்டால் மருத்துவர்கள் தவறான நடத்தைக்கு குற்றவாளிகளாகக் கண்டறியப்படுவார்கள் என்றும், ஏற்கனவே 2013 ஆம் ஆண்டில், உச்சநீதிமன்றம் இரண்டு விரல் சோதனை அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று தீர்ப்பளித்தது. அதில் "கற்பழிப்பிலிருந்து தப்பியவர்களின் தனியுரிமை, உடல் மற்றும் மன ஒருமைப்பாடு மற்றும் கண்ணியத்திற்கான உரிமையை மீறுகிறது." என்று தீர்ப்பு வழங்கிருந்த நிலையில், மீண்டும் 2022 –ல் "இரண்டு விரல் சோதனை" அல்லது "பிறப்புறுப்பு சோதனை" நடத்தப்படக்கூடாது, ஏனெனில் அதில் எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை. மற்றும் கற்பழிப்பு குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டுமென்று, பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்களை மீண்டும் "இரண்டு விரல் சோதனை" அல்லது முன் பிறப்புறுப்பு சோதனைக்கு உட்படுத்தும்போது, அது அப்பெண்ணை பாதிக்கிறது மற்றும் மீண்டும் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது, மேலும் அவர்களின் கண்ணியத்தை அவமதிக்கிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## மத்திய பிரதேச மாநிலம் –எதிர்– ஜோகிந்திரா

வீடு கட்ட பணம் கேட்பதை வரதட்சணைக் கோரிக்கையாகக் கருத முடியாது என்று மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம் கூறிய இந்த வழக்கில், 3 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு, "வரதட்சணை"யின் வரையறையை விரிவுபடுத்தியது. சொத்துக்காகவோ அல்லது விலைமதிப்பற்ற பொருளாகவோ ஒரு பெண்ணிடம் எந்தக் கோரிக்கையும் விடுக்கப்பட்டாலும், அது "வரதட்சணையாக" கருதப்பட வேண்டும் என்று அறிவித்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் இறந்த பெண்ணை தொடர்ந்து துன்புறுத்தியுள்ளனர் மற்றும் வீடு கட்ட பணம் கேட்டு அவளின் குடும்ப உறுப்பினர்களை அணுகுமாறு தொடர்ந்து கேட்டுக்கொண்டனர், அவர்களின் வற்புறுத்தலின் பேரில் தான், வீடு கட்டுவதற்கு சில தொகையை இறந்த பெண் அப்பெண்ணின் குடும்ப உறுப்பினர்களிடம் கேட்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மேற்கூறிய விதியைத் தூண்டுவதற்கான நான்கு முன்நிபந்தனைகளும் திருப்திகரமாக இருக்கும்போது, அதாவது, கீதா பாயின் மரணம் அவரது திருமணமான ஏழு ஆண்டுகளுக்குள் அவரது திருமண வீட்டில் நடந்தது. அவர் எரிக்கப்பட்ட காரணத்தால், அதுவும் அவள் ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்தபோது, அசாதாரண சூழ்நிலையில் மரணம் நிகழ்ந்துள்ளது. அவள் இறப்பதற்கு முன்பு கணவன் மற்றும் கணவனின் குடும்ப உறவினர்கள் மூலம் கொடுமை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளாள். இத்தகைய கொடுமை/தொல்லை வரதட்சணைக் கோரிக்கை தொடர்பாக இருந்துள்ளது என்று கூறி இது வரதட்சணை கொடுமை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

## லதா சிங் –எதிர்– உத்தரப் பிரதேச மாநிலம்

லதா சிங் என்பவர் 18 வயது அடைந்தவராக இருந்தபோது, மாற்றுச் சாதியைச் சேர்ந்த ஒருவருடன் திருமணம் செய்து கொள்வதற்காக தனது வீட்டை விட்டு வெளியேறினார். அப்பெண்ணின் குடும்பத்தில் அதிருப்தி அடைந்த அவரது சகோதரர்கள், அப்பெண் காணாமல் போனோர் என்ற புகாரை தாக்கல் செய்தனர், மேலும் அவர் கடத்தப்பட்டதாகவும் புகார் செய்திருந்தனர். இதனால் அவரது கணவர் குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். கணவர் குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட வேண்டும் என்பதற்காக, லதா சிங் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார், இதன் விளைவாக ***"வயது வந்த பெண்ணுக்கு அவள் விருப்பப்படி யாரையும் திருமணம் செய்து கொள்ளவோ அல்லது வாழவோ உரிமை உண்டு".*** மதங்களுக்கு இடையே ஆன திருமணம் அல்லது சாதிகளுக்கு இடையே ஆன (மத சாதி மறுப்பு) திருமணங்களை முடிவு செய்பவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது காவல்துறை குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

## சுஹாஸ் கட்டி –எதிர்– தமிழ்நாடு மாநிலம்

குற்றம் சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்ப நண்பர். குற்றம் சாட்டப்பட்டவர் பாதிக்கப்பட்ட பெண்ணை திருமணம் செய்ய மறுத்தக் காரணத்தினால் அந்த நபர், பாதிக்கப்பட்ட பெண்ணைப் பற்றி ஆபாசமான மற்றும் அவதூறான செய்திகளை Yahoo மெசஞ்சர் குழுக்களில் அவரது நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் அவரது மானத்தை

குழைக்கும் வகையில் ஆபாச பதிவுகளை வெளியிட்டார். அந்த நபர் அப்பெண்ணின் பெயரில் தொடங்கிய போலி கணக்கின் மின்னஞ்சல்களையும் அனுப்பினான். போலி கணக்கின் மூலம் அப்பெண்ணிற்கு எரிச்சலூட்டும் அழைப்புகள் வந்தன. மேலும் அவள் பாலியல் வேலைக்காகக் கோருகிறார் என்ற அழைப்புகள் வந்துள்ளன. இத்தகைய துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட அந்த பெண், அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்து குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டார், அவர் அத்தகைய செயலைச் செய்யவில்லை என்று மீண்டும் கூறினார். அரசுத் தரப்பில் 12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு முழு ஆவணங்களும் சாட்சி ஆவணங்களாகக் குறிக்கப்பட்டன. மேலும், இந்திய சாட்சியச் சட்டத்தின் 65 பி பிரிவின் கீழ் சில ஆவண ஆதாரங்கள் நிலையானவை அல்ல என்று குற்றவாளியை விடுவிக்க வாதிட்டனர். எவ்வாறாயினும், சைபர் அலுவலரின் சாட்சிகள் உட்பட நிபுணத்துவ சாட்சிகள் மற்றும் அதன் முன் சமர்ப்பிக்கப்பட்ட பிற ஆதாரங்களை ஏற்ற நீதிமன்றம் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வந்தது. தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் தீர்ப்பு வழங்கினார். அபராத தொகையை செலுத்திய குற்றவாளி, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். *இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப சட்டம் 2000 பிரிவு 67–ன் கீழ் தண்டனை விதிக்கப்பட்ட முதல் வழக்காக இது கருதப்படுகிறது.*

## லட்சுமி –எதிர்– இந்திய அரசு

2006–ல், ஆசிட் வீச்சுக்கு ஆளான லட்சுமி என்பவர் ஆசிட் விற்பனையை கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்டவருக்கு உரிய இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். பெண்களுக்கு எதிரான ஆசிட் தாக்குதல்கள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, ஆசிட் விற்பனைக்கு உச்ச நீதிமன்றம் 2013–ல் கடுமையான விதிமுறைகளை விதித்தது. அதில் ஆசிட் விற்பனைக்கு தடை விதித்தது. வாங்குபவர் செல்லுபடியாகும் அடையாளச் சான்றிதழை அளித்து, வாங்குவதற்கான அவசியத்தை வியாபாரியிடம் கூறினால் மட்டுமே அமிலத்தை விற்க முடியும். வியாபாரி மூன்று நாட்களுக்குள் விற்பனை விவரங்களை காவல்துறையிடம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். மேலும், 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஆசிட் விற்பதும் குற்றமாகும் என்ற விதிமுறைகளை உச்ச நீதிமன்றம் விதித்தது.



# அவசர உதவிக்கு அழைக்க வேண்டிய எண்கள்

| | | |
|---|---|---|
| அவசர போலீஸ் எண் 100 | பெண்களுக்கான அவரச உதவி எண் 1090/181 | தேசிய பெண்கள் ஆணையம் எண் 78271 70170 |
| | சிறார் உதவி எண் 1098 | பாதுகாப்பு அலுவலர் மதுரை எண் 99426 56138 |
| போலீஸ் அவசர குறுஞ்செய்தி எண் 95000 99100 | மூத்த குடிமக்கள் எண் 14567 | வழிகாட்டுதல் குழு அய்டியாஸ், மதுரை எண் 93423 15242 |



# குறிப்புகள்

# குறிப்புகள்

# பெண்களுக்கு எதிரான வன்முறையை

# தவிர்ப்போம் !

# தடுப்போம் !!

# தட்டிக்கேட்போம் !!!

பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு வழிகாட்டுதல் குழு

**அய்டியாஸ் மையம், மதுரை.**

தொடர்புக்கு: 9342315242